விலை ரூபா 5.00

# ஈழநாடு வாரமலர்

மலர் 27 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 11 இதழ் 141
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 25 – 6 – 1995

25-6-1995

## வவுனியாவில் படை குவிப்பு ராணுவ ஒத்திகை ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியிலும் வவுனியா வடக்கிலும் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

செட்டிகுளம், வவுனியா வடக்குப் பகுதிகளில் தலா ஒரு அணி என்ற விகிதத்தில் இராணுவத்தினர் குவிக்கப் பட்டிருக்கிறார்கள் இவர்கள் தீவிர பயிற்சியிலும் இராணுவ ஒத்திகையிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

வடபகுதியின் பல முகாம்களிலிருந்தும் ஒரே நேரத்தில் தாக்குதல்களை மேற்கொள்வதற்கான திடமாகவே இப்படைக்குவிப்பு இடம்பெற்றுள்ளதாககருதப் படுகின்றது. (சி-ரி)

## மாட்டுவண்டிலில் சென்ற தமிழ் குடும்பம் மீது சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் திகிலவெட்டைப் பகுதியில் மாட்டு வண்டிலில் சென்றுகொண்டிருந்த தமிழ் குடும்பமொன்றை நோக்கி படையினர் துப்பாக்கிச் சூட்டை நிகழ்த்தினர்.

இத்தாக்குதலினால் வண்டியில் வந்துகொண்டிருந்த அனைவரும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை துறைநீலாவணையில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் பாடசாலை அதிபரான வேதநாயகம் என்பவர் பலியானார். (கி-சி-ரி)

## புறக்கோட்டைப் பகுதியில் குண்டு வெடிப்பு!

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதியில் சிறிய குண்டுவெடிப்புச் சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது புறக்கோட்டையில் மைலன் சந்திப் பகுதியில் அமைந்துள்ள 'ஐலண்ட்' லொஜ்ஜுக்கு அருகில் இக்குண்டு வெடித்துள்ளது. எனினும் குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை.

கடந்த சில வாரங்களாக

(10ம்பக்கம் பார்க்க)



தமிழீழம் இயற்கைவளம் கொண்டது. உணவுத் தேவையைப் பொறுத்தளவில் தன் நிறைவுகொண்டது. காலத்துக்குக் காலம் மா, வாழை, பலா கனிவகைகளும் தேவையைப் பூர்த்திசெய்கின்றன. தற்போது வடதமிழீழத்தில் பலாப்பழக்காலம் பழங்கள் தாராளமாக சகலருக்கும் கிடைக்கும் வகையில் சந்தைக்கு வருகின்றன. படம்: சு. சுபாஸ்

## ★ ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு

# அரசுக்கு ஜே. வி. பி. காலக்கெடு; இல்லையேல் எதிர் நடவடிக்கை!

## கடித மூலம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜூலை மாதம் 15ம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் தவறினால் எதிர் நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக ஜே. வி. பி. எச்சரித்துள்ளது.

ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைவாகவே தாங்கள் நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

ஜூலை மாதம் 15ம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து விடுவது என்ற தனது தேர்தல் உறுதிமொழியை பொ. ஜ. மு. அரசு நிறைவேற்றவேண்டும் என்றும் ஜே. வி. பி. கேட்டுள்ளது.

ஜூலை மாதம் 15ம் திகதிக்கு முன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பதற்கான அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அரசியல் கட்சியோ தனி நபரோ அதனை ஆட்சேபிக்கப்போவதில்லை என்று ஜே. வி. பி. இயக்கம் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ரி

## 37 தனியார் மருத்துவ மாணவரையும் மருத்துவ பீடத்துடன் இணைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியின் 37 மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துடன் இணைப்பது என்ற முடிவை யாழ். பல்கலைக்கழகப் பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் அனுமதி தொடர்பாக டாக்டர் எஸ். ஆனந்தராசா தலைமையிலான குழுவினர் தயாரித்தஅறிக்கை

(10ம் பக்கம் பார்க்க)

பிரபா விவகாரத்தில்:

## எமது நாட்டு நடைமுறை பின்பற்றப்படுகிறது

— கதிர்காமர் பேட்டி

(கொழும்பு)

நான் இந்தியா சென்றபோது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்தியா கேட்டுக்கொள்ளவுமில்லை. அது பற்றிய பேச்சும் எடுக்கவில்லை தற்போது நிலைமை மாறியுள்ளது, முக்கியமாக போர் நிறுத்த முறிவின்பின் நிலைமை மாறியுள்ளது, இந்தியா திரு. பிரபாகரனை நாடு கடத்துமாறு கேட்டுக்கொண்டபோதும் எங்கள் நாட்டு சட்ட நடைமுறைகள் பலவுண்டு. அதனை பின்பற்றுவதோடு அதுவே இப்போது நடைபெறுகிறது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று ரூபவாஹினிக்கு வழங்கிய

(10-ம் பக்கம் பார்க்க)

குறைந்த விலை! தரமான பிரதி!
[போட்டோஸ்ரட் 5/- [ காகிதாதி தனி ]
பெருப்பித்து [ 205% ] சிறிப்பித்து [ 48% ]
கொடுக்கப்படும்.
ரோணியோ 19/- இருபக்கம் 29/- ஸ்ரென்சில் 10/-
ரைப்பிங் தமிழ் 7/- ஆங்கிலம் 8-50
(ஏ-5042)

யாழ் மருந்தகம்
(வெஸ்கோ)
470, (250) ஆஸ்பத்திரி வீதி, (ஓ. பி. டி. முன்பாக) யழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

### SPECIAL ANTENNA

To view Rupavahini Madras, Programmes Fixing Special T. V. Antenna Repairing Antennas, Radios, T. V Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road [Ariyakulam Junction], Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (A-5003)

### ஆண்டு-5 புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன அடுத்த வெளியீடு 25-6-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். BOND 58 A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (எ 5017)

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினாப் பத்திரம் 1, வினாப் பத்திரம் 2 க்குரிய "பொது விவேகம், பொதறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம். (ஏ-5027)

### விற்பனைக்கு

இலங்கையின் அரசியல் நிகழ்கால நிகழ்வுகள் மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது. ஆக்கம்: பி. எம். புண்ணியாமின் B. A. (S L) விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-5040)

### O/L MATHS 95

Distinction, Credit பெறு பேறடைய மேலதிக பயிற்சிகளுடன் ஆரம்பத்திலிருந்து இதுவரையும் சித்தியடையாதவர்கட்கும் (ஆண்டு 9, 10) உட்பட B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி (சிவன் கோவில் மேற்கு வீதி) திருநெல்வேலி. (சி-1529)

## விபத்தில் மரணம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் ஹோமகமவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் பிரபல சிங்களத் திரைப்படத் தயாரிப்பாளர் சமந் தலீலாபந்துல் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

'ஈயோராத்திரி' என்ற பிரபல சிங்களத்திரைப் படத்தையும் இவரே தயாரித்திருந்தார். கி-சி

## இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சர்வமத யோகாசனஸ்தானபத்தாரால் மாதா மாதம் நடத்தப்படும் யோகாசன கருத்தரங்கு இன்று 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி ப. 3 . 30 மணிக்கு நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

ர

0 0 0

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியெற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

170-

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இணுவில் இந்து சமய வளர்ச்சிச்சங்கமும், ஆலய இளந்தொண்டர் சபையும் கூட்டாக இணைந்து நடத்தவுள்ள சைவ சமய அறிவுப் போட்டிப் பரீட்சை இன்று 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9: மணிக்கு நடைபெறும் என தெரிவித்துள்ளர்.

154

0 0 0

(உடுவில்)

மானிப்பாய் வடக்கு உச்சியோடை பெரியதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று 25ம் திகதி ஞாயிறு பகல் நடைபெற உள்ளது.

109

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் — வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்) அலங்கார உற்சவம் இன்று 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் யூலை 4-ந் திகதி செவ்வாய்க்கிழமை வரை 10 தினங்கள் நடைபெறும்.

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கெடியேற்றததுடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த் திருவிழா ஜூலை மாதம் 3ம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தத்திருவிழா 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது.

139-கி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை—வேலணை பிரதேச செயலர் பிரிவுகள் இணைந்து நடாத்தும் மெய்வல்லுனர் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இன்று 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணை பிரதேச செயலர் இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கலந்துகொள்வார்.

-162 175

0 0 0

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியால் வடதமிழீழ ரீதியாக நடாத்தப்பட்ட வதிவிட வேளாண்மை போட்டியில் பருத்தித்துறை வட்டத்திற்கான பரிசளிப்பு நிகழ்வும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் இன்று 25-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995 — 06 - 25**

ஞாயிறு இரவு

- 8-02 இசையரங்கம் நிகழ்ச்சியில் பாடுபவர் திரு. ச. பாலசிங்கம் அவர்கள்
- 8-30 செய்திகள்
- 8-40 தொடர்நாடகம் கருணைரவி எழுதும் "காணி நிலம் வேண்டும்" இறுதி அங்கம்

**1995—06—26**

திங்கள் காலை

- 7-02 மாவீரவணக்கம்
- 7-15 நீங்கள் கேட்டவை
- 7-30 செய்திகள்
- 7-35 பத்திரிகைச் செய்திகள்
- 8-00 களத்தில் மலர்ந்தவை

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—06—25**

ஞாயிறு மாலை

- 5-01 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
- 5-02 எழுச்சிகீதம்
- 5-10 புதியவை
- 5-15 மழலைகளுக்காக
- 5-30 கதம்பம்
- 6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
- 6-02 உங்கள் தெரிவு
- 6-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தமிழ்திறன் விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தமிழ்த்திறன் விழா பாடசாலை மண்டபத்தில எதிர்வரும் 28ம் திகதி புதன்கிழமை மு.ப 10,00 மணிக்கு அதிபர் இ. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு .நா. சத்தியநாதனும் சிறப்புவிருந்தினராக திரு. க, அருண் மாஸ்டரும் கலந்து கொள்வார்கள்.

## கப்பல் சேவை மாற்றம்

(கொழும்பு)

பருத்தித்துறை — மன்னார் பகுதிக்கான பயணிகள் கப்பல் சேவைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது

ஆனால் இதுகுறித்து முழுமையான விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. -கி

## நூல் வெளியீடு

(கொழும்புத்துறை)

புலோலி மேற்கு விநாயகர் தருமநிதியத்தின் பொது நிறுவனங்களுக்கான இலவசவெளியீடு 'ஆனமா' (உயிரினங்கள்) உருவாகும் விதமும் ஆரம்ப முடிவுகளும்' நூல் அண்மையில் நிறுவனத்தின் ஆயுட்கால தலைவர் திரு. ஆ. கி. முருகுப்பிள்ளையினால் வெளியிடப் பட்டுள்ளது

பல ஆழ்ந்த சிந்தனைகள் மருத்துக்களை இந்த நூல் உள்ளடக்கியுள்ளது. 154

---

திருப்பொலி சரவணைக் கட்டுவன்வான்

**அருள்மிகு ஐயனர் திருக்கோவில்**

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள மேற்படி கோவில் பொங்கல் தின நினைவு அபிடேக ஆராதனைகளும் மகேசுவர பூசையும்

27 — 06 — 95 செவ்வாய் காலை

வண்ணை அருள்மிகு ஐயனர் ஆலயத்தில் நிகழும்.

★ அடியார்கள் வழிப்பட்டு இறையருள் பெறுகவென அழைக்கிறேம்.

உபயகாரர்.

சரவணை — வேலணை. (சி-1527)

---

## சந்தா விநியோகம்

"ஈழநாடு" பத்திரிகை

யாழ். மாநகரசபை எல்லைகளுள் நாளாந்தம் உங்கள் வீடுகளுக்கு

விநியோக கட்டணம் எதுவுமின்றி விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சந்தா பத்திரிகைகள் தினமும் அதிகாலை 6—00 மணிக்கு முன் எமது காரியாலய விநியோகப் பையன்களால் உங்கள் வீடுகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

∴ சந்தா கட்டணம்

| 1 வருடம் | 6 மாதம் | 3 மாதம் | 1 மாதம் |
|---|---|---|---|
| 1800/- | 900/- | 450/- | 150/- |

★ தங்கள் சந்தாவுக்கு நிறுவனத்துடன் காரியாலய நேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

விநியோக முகாமையாளர்,

**ஈழநாடு லிமிட்டெட்,**

**யாழ்ப்பாணம்.**

(ஏ-5045)

---

யாழ். றோட்டறிக் கழகத்தின்

## 54ஆவது ஆண்டு நிறைவு விழா

இடம் :
யாழ். இந்துக்கல்லூரி,
குமாரசாமி மண்டபம்

காலம் :
1995 ஜூன் 25 [ ஞாயிற்றுக்கிழமை ]
பிறபகல் 3—30 மணி

தலைவர் :
Rtn. PHF. ஈ. சரவணபவன் அவர்கள்
( தலைவர், யாழ். றோட்டறிக் கழகம் )

பிரதம விருந்தினர் :
பேராசிரியர் க. குணரத்தினம் அவர்கள்
( துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம் )

கௌரவ விருந்தினர் :
திரு. வெ. இளங்குமரன் அவர்கள்
( பொறுப்பாளர், தமிழீழக் கல்விக்கழகம் )

★ "சக்கரம்" மலர் வெளியீடு : Rtn. PP. Dr. S. இராசசூரியர் முதற்பிரதி வழங்கல்

★ முச்சக்கர வண்டிகள், மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

★ றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்கள்

★ பரிசில் வழங்கல் : றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கானது

★ எமது கழகத்தின் 54ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
யாழ். றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

விழாவுக்கான ஆதரவும், உதவியும் :
கலெக்சி புகைப்பட சேவை, யாழ்ப்பாணம்.

(ஏ-5046)

மாநகராட்சி 25-6-1995

# இந்தியா - அஸ்ரப் - சிறிமானி

## மனித உரிமை

ச. தியாகராசா

### வாரசாரம்

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக இந்தியா செயல்படுகிறது. ராஜீவ்காந்தி கொலைதொடர்பாக கடந்தமூன்று வருடகாலமாக இந்தியா சிறிலங்காவிடம் திரு. பிரபாகரனை தம் வசம் ஒப்படைக்கும்படி கேட்காது இப்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்தவுடன் திரு. பிரபாகரனைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்பது மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்காதவாறு முட்டுக்கட்டை நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு முன்னாள் வெளி உறவு அமைச்சரான ஏ. சி. எஸ். ஹமீத் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார். இவ்விதம் பேச்சுவார்த்தையை இந்தியா குழப்பும் என்பது எதிர்பார்க்கப்பட்ட விடயமே. அரசு பேச்சுவார்த்தைக்கு அமைச்சர் மட்டத்தில் தூதுக்குழுவினரை அனுப்பாமையும், இழுத்தடித்த போக்கும், அக்காலத்திலும் அதன் பின்னரும் சந்திரிகாவும் வெளிநாட்டமைச்சரும் இந்தியாவுக்கு பல தடவை காவடி எடுத்ததும் இந்தியாவின் ஆலோசனைகளைப் பெறுவதற்கேயாகும். அந்த வகையில்தான் திரு. பிரபாகரனை ஒப்படைக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் எழுந்தது. சாப்பிட அடம் பிடிக்கும் பிள்ளைக்கு பூச்சாண்டி காட்டி தாய் உணவு ஊட்டுவதுபோன்ற நிலைதான் இது. நீ, நான் சொல்வதைக் கேட்காவிட்டால் பூதத்திடம் பிடித்துக் கொடுத்துவிடுவேன் என்று சந்திரிகா பூச்சாண்டி காட்டுகிறார். பூதம் கடதாசிப் பூதம் என்பதை ஏற்கனவே தமிழர்கள் அறிந்துள்ளார்கள்.



### முஸ்லிம் காங்கிரஸ்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ், சிறிலங்கா இஸ்ரேலுடன் இராசதந்திர உறவுகளை ஏற்படுத்தினால் உடனே விலகிவிடும் என்று அஷ்ரப்பும் அவரது பொதுக் காரியதரிசியும் முந்திரிக் கொட்டைகள் போல கதறினார்கள். ஆனால் இப்போது உண்மையில் நடந்ததென்ன? நாடாளுமன்றில் கடந்த வாரம் உரையாற்றுகையில் அமைச்சர் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸ் இந்த அரசாங்கத்திலிருந்து விலகிவிடும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள். தனக்கு ஜனாதிபதியிலும் ஜனாதிபதிக்கு தன்னிலும் பூரண நம்பிக்கை உண்டென்றும் தங்கள் கட்சி ஒருபோதும் அரசிலிருநது விலகமாட்டாது என்றும் கூறியுள்ளார். உண்மையில் அஷ்ரப்புக்கு தனக்குக் கிடைத்த அமைச்சை கைவிட விருப்பமில்லை. அத்தோடு அரசை விட்டு விலகினால் தாங்கள் தனிமைப்பட்டுவிடுவோம் என்பதும் தமது ஆதரவு இல்லாவிட்டாலும் அரசுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாதென்றும் முஸ்லிம் காங்கிரசுக்குத் தெரியும். அதனாலேயே இஸ்ரேல் பிரச்னையில் இறுக்கமான நிலைப்பாட்டை அவரால் கடைப்பிடிக்க முடியாததாய் இருக்கிறது.

### சிறிமானி அத்துலத்முதலி

இந்த நிலையில்தான் சிறிமானி அத்துலத்முதலியின் தலைமையிலான ஜனநாயக ஐக்கிய முன்னணியும் இருக்கிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும் என்று கூறியதாலேயே நான் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்தேன். இப்போது அரசு அதிலிருந்து பின்வாங்குவது போல் தோன்றுகிறது என்று சிறிமானி கூறியுள்ளார். இதற்காகவே லலித் அத்துலத்முதலியும் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினார். அரசு இதில் தாமதம்செய்யும் ஒவ்வொரு நிமிடத்துக்கும் மக்களுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டுமென்றும் அவர் கூறினார். திருமதி சிறிமானியின் எதிர்ப்பும் அங்கலாய்ப்பும் சந்திரிகா அமையாரை ஒன்றும் செய்துவிடப்போவதில்லை. அடித்தகாலைத் திரும்பவும் நக்கும் பிராணிபோன்ற உதிரித் தமிழ்க்குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கும்வரை சந்திரிகா தனது அரசைப் பாதுகாத்துக் கொள்வதில் பிரச்னை இல்லை.

### மனித உரிமைகள்

சிறிலங்காவிலும் மனித உரிமைகள்பற்றிப் பேசப்படுகிறது. முந்திய அரசாங்க காலத்தில் இருந்த மனித உரிமைமீறல்கள்சந்திரிகாவின் அரசாங்கத்தில் இல்லை என்று மேற்குலக நாடுகள் நம்புகின்றன என்று லக்ஸ்மன் கதிர்காமர் கூறுகிறார். சந்திரிகாவின் கணவன் விஜயகுமாரரணதுங்காவின் தாயாரின் மரணவீட்டுக்குச்சென்ற ஐ. தே. க. கட்சி தேசிய பட்டியல் உறுப்பினர் தாக்கப்பட்டார். அவரது கார் அடித்துடைக்கப்படுகிறது. இவற்றைவிட கிழக்கில் வகைதொகையின்றி அப்பாவித் தமிழ் மக்கள் ஆண், பெண், குழந்தை என்ற பேதமில்லாமல் கண்மூடித்தனமாகக் கொன்று குவிக்கப்படுகின்றனர். இவையெல்லாம் மனித உரிமை மீறல்கள் இல்லாமல் வேறென்ன? லக்ஷ்மன் கதிர்காமரின் பச்சைப் பொய்களை அப்படியே விழுங்கும் மேற்குலக நாடுகள் தங்கள் மூளைகளை அடகுவைத்துவிட்டார்களா?



நமது நோக்கு

## காலக்கெடு

ஒருவருட காலத்துக்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவோம். நன்கு திட்டமிடப்பட்ட யுத்தம் ஒன்றையே நாம் தற்போது வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நடத்திவருகிறோம். இவ்வாறு அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு வரி அதிகரிப்புத் திருத்தச்சட்டத்தின்மீது பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வித காலக்கெடு வைத்துப் பேசியவர்கள் முன்னரும் பலர் இருந்தனர் என்பது ஒருபக்கம் இருக்க ''யுத்தம்'' என்ற வார்த்தையைப் பிரயோகிப்பதன்மூலம் ரத்வத்தை அவர்கள் ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் யுத்தத்தை நடத்துவதை ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது ஒரு நாட்டில் நடக்கும் கிளர்ச்சி, பயங்கரவாதம் என்பவற்றை அடக்கும் செயலை யுத்தம் என்று கூறுவதில்லை. ஆகவே யதார்ந்த ரீதியாக சிறிலங்கா நாடு தமிழீழ நாட்டுடன் யுத்தம் செய்கிறது, அந்த யுத்தத்தை ஒரு வருட காலத்துக்குள் முடிவுக்குக்கொண்டுவருவேன் என்று ரத்வத்தை கூறுவதன்மூலம் தமிழீழம் சிறிலங்காவைப் பொறுத்தளவில் அந்நிய நாடு என்பதை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார்.

யுத்தத்தை காலக்கெடுவைத்து முடிப்பேன் என்று ஜே. ஆர். கூறியுள்ளார், அத்துலத்முதலி, ரஞ்சன் விஜயரட்ன போன்றோரும் கூறியுள்ளனர். இவர்களை எல்லாம் தூக்கி எறியும் வகையில் டி, பி. விஜயதுங்கா கடந்த தேர்தல் காலங்களில் மாதக்கணக்கு கிழமைக் கணக்கில் யுத்தம்பற்றி எடைபோட்டு வீரமுழக்கம் செய்தார். நாள் செல்லச்செல்ல காலக்கெடுவும் அதற்கேற்றவாறு தள்ளிப்போடப்படும். இது ஆட்சியிலிருக்கும் சிங்களத் தலைவர்களுக்கு கைவந்த கலை. விடுதலைப் போராட்டங்கள் தோல்வியுற்றதிற்கு சான்றுகளில்லை. அதை அடக்கி ஒடுக்கி வெற்றிகண்ட ஒடுக்குமுறையாளர்களையும் வரலாறு கண்டதில்லை. காலக்கெடு வைத்துப் பேச முதலில் தொடங்கியவர் ஜே. ஆர். தான். விடுதலைப் போர் தொடங்கிய காலத்தில் தன் மருமகன் முறையான பிரிகேடியர் வீரதுங்காவின் தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தை காலக்கெடுவைத்து அக்காலத்திற்குள் பயங்கரவாதத்தை அடக்கி வருமாறு பணித்தார். இந்தப் பணிப்பை ஜே. ஆர். 13-07-79 இல் செய்தார். 1979-ம் ஆண்டு டிசெம்பர் 31க்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிக்கும்படி ஜே. ஆர். கூறினார். அப்போது இதுபற்றிப் பேசிய மைத்திரிபால சேனநாயக்கா ஜே. ஆரின் பணிப்பு கிற்லர் தன் தளபதி கிச்மனிடம் யூதர்களை குறிப்பிட்ட காலத்துக்குள் ஒழித்துக்கட்டும்படி கூறியதற்குச் சமன் என்று ஒப்பிட்டு வர்ணித்தார்.

வீரதுங்காவின் இராணுவம் வந்து நடத்திய தர்பாரில் அப்பாவி மக்கள் புலிகளாகக் கணிக்கப்பட்டனர். திரைப்படச் சுவரொட்டி ஒட்டிய படமாளிகைத் தொழிலாளி படையினரால் நையப்புடைக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஈற்றில் பிரிகேடியர் தான் பயங்கரவாதத்தை அடக்கிவிட்டேன் என்று குறிப்பிட்ட கால எல்லைக்குள் அறிக்கையும் சமர்ப்பித்தார். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டிருக்கலாம் ஆனால் விடுதலைப் போராட்டம் கூர்மை அடைந்தது. றப்பர் பந்தை தண்ணீருக்குள் காலால் அமர்த்திவைத்தாலும் அது 'காலககிரமத்தில்மிதககும். கால் விறைத்துப்போக பந்து தானாகவே மேலெழுந்து மிதக்கும்.

### அமைச்சருக்கு சிறை

மனித உரிமைகள் எவ்விதம் பாதுகாக்கப்படுகின்றதென்பதற்கு] டென் மார்க் நாடு ஒரு உதாரணம். 1987 தொடக்கம் 1989 வரை

[9ம் பக்கம் பார்க்க[



### மிஸ்டர், மிஸிஸ் டாமோடரன்

மிஸிஸ்: ஹூ இஸ் வள்ளுவர்?

மிஸ்டர்: அவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த வான் டிரைவர்.

மிஸிஸ்: வான் டிரைவரா?

மிஸ்டர்; யேஸ், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட பாடல் இருக்கு உங்களுக்குத் தெரியாதா?

மிஸிஸ்: யேஸ், யேஸ் தாங்கியூ.

சிரித்திரன் சுந்தர்

## பலலட்ச மக்கள் பலியாகிய புருண்டி இனப் பிரச்னை

### உலக வலம்

இன்று இனப்பிரச்னையால் லட்சக் கணக்கான மக்கள் கொல்லப்படுகிறார்கள். பலபேர் கை கால் இழந்து ஊனமுற்றவர்களாக தங்களுடைய வாழ்க்கையை ஊன்றுகோலுடன் கழிக்கவேண்டிய நிலையில் உள்ளார்கள். பல கோடி மக்கள் அகதிகளாக வேறு நாடுகளிலும். அகதி முகாம்களிலும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள்.

பல லட்ச மக்களை இழந்து, பல லட்ச மக்கள் அகதிகளாகும் நிலை சின்னஞ்சிறிய புருண்டி நாட்டிலும் இடம்பெற்றுவருகிறது. வறிய நாடாக இருக்கும் புருண்டி இன்று இனப்பிரச்னையில் சிக்கிச் சீரழிந்து சின்னாபின்னமாகியுள்ளது.

மத்திய ஆபிரிக்காவின் தெற்குப் புறமாக அமைந்துள்ள இந்த நாட்டை சயர், ருவாண்டா, தன்சானியா ஆகிய நாடுகள் எல்லைப்புற நாடுகளாக உள்ளன. இங்கு டுட்டு, ருட்சி என இரு இன மக்கள் வாழ்கிறார்கள். டுட்டு இனத்தவர் 85 வீதமும், ருட்சி இனத்தவர் 15 வீதமுமாக வாழ்கிறார்கள். மொத்தமாக 62 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். எல்லோரும் முக்கியமாக விவசாயத்தை பிரதான தொழிலாக மேற்கொண்டு வருகிறார்கள்.

நீண்ட காலமாக ஒற்றுமையுடன் இருந்த இந்த இரு இன மக்கள் 1992ம் ஆண்டு மோதிக்கொண்டார்கள். அன்று ஏற்பட்ட இனக்கலவரத்தில் 3 லட்சத்துக்கு அதிகமான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

1993ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 'டுட்டு' இனத்தவர் தெரிவுசெய்யப்பட்டார். ஆனால் அதே ஆண்டு அக்டோபரில் நடந்த புரட்சியில் ருட்சி இனத்தவர்கள் மேற்கொண்ட சதிப்புரட்சியில் அவர் கொல்லப்பட்டார். இதில் ஏற்பட்ட இனக் கலவரத்தில் இரு இனங்களிலும் 2 லட்சம் மக்கள் பலியாகினர்.

இரண்டாவது தலைவராக தெரிவு செய்யப்பட்ட 'டுட்டு' இனத் தலைவரும், ருவண்டா தலைவரும் பிரயாணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்தச் சம்பவம் 1994 ஏப்ரலில் நிகழ்ந்தது. இதில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் ருவண்டாவில் 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள்.

தற்பொழுது நாட்டின் தலைவராக இருப்பவர் சில்வெஸ்டர் நிதம் பாய்துண் கன்யா என்பவர் இவரும் ஒரு ருட்டு இனத்தவரே. ஆனால் இராணுவத்தில் ருட்சி இன மக்கள் கூடுதலாக இருக்கிறார்கள். அண்மையில் ஏற்பட்ட இனக் கலவரங்களில் 160பேர் கொல்லப்பட்டனர், 30,000 ருட்டு

(9ம் பககம் பார்கக)

[4]

# தீவுகளின் இராஜகுமாரி எப்படி இந்து சமுத்திரத்தின் பிச்சைக்காரியானாள்

## மு. திருநாவுக்கரசு

ஐ. தே. க. நேட்டோவுடன் கூட்டாயிருந்த ஒரு வலதுசாரி அமைப்பு என்ற வகையில் இலங்கையைக் கைத்தொழில் மயப்படுத்தக் கூடிய வாய்ப்பு அதற்கு இருந்தும் அது ஏன் அதனைச் செய்யவில்லை என்பதே இங்கு ஆராயப்படுகிறது.

மூன்றும் உலக நாடுகளில் கைத்தொழில் வளர்ச்சியை எவ்வளவுதூரம் தடுக்கமுடியுமோ அவ்வளவு தூரம் அதனைத் தடுக்கவேண்டும் என்பது மேற்குலகின் இப்போதைய கொள்கைகளில் ஒன்று. ஆனால் இரண்டாம் உலக

## கைத்தொழிலுக்கான சர்வதேச சூழலை ஐ. தே. க. கைவிட்டமை

மகாயுத்தத்தின் பின்பான நிலை தற்போதைய நிலையை விட வேறுபாடானதாய் இருந்தது.

ஒருபுறம் மேற்கு ஐரோப்பிய கைத்தொழில் வள நாடுகள் யுத்தத்தால் பெரிதும் அழிந்திருந்தன. எனவே அவர்களால் உடனடியாகப் பெருமளவு கைத்தொழில் பண்டங்களை நிரம்பல் செய்யமுடியவில்லை. இதனாலும் யுத்த அழிவிலிருந்து நிமிர வேண்டிய நிர்மாணிப்புத் தேவைகளினாலும் உலகிற் பண்டங்களுக்கு அதிக தேவை இருந்தது. இதனால் மூன்றும் உலக நாடுகளின் பண்ட உற்பத்தியை முழுமூச்சாகத் தடுக்க வேண்டிய தேவை அப்போது மேற்குலகிற்கு குறைவாகவே இருந்தது.

மறுபுறம் சோவியத் யூனியனுடனான கெடுபிடி யுத்தத் தேவைக்கென மூன்றும் உலக நாடுகளை தம்முடன் அணிசேர்க்க வேண்டிய அவசியம் மேற்குலகிற்கு இருந்ததனால் மூன்றும் உலக நாடுகளின் கோரிக்கைகளுக்கு அல்லது வற்புறுத்தல்களுக்கு ஓரளவு விட்டுக்கொடுத்துப்போக வேண்டிய அவசியம் மேற்குலகிற்கு இருந்தது.

அக் காலகட்டத்தில் இலங்கை கைத்தொழில்மயமாக்கத்திட்டத்தைக் கடைப்பிடித்திருந்தால் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அதற்குத் தடையாக இருந்திருக்கமுடியாது. அத்துடன் இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த ஆரம்பகால கட்டத்தில் தத்தமக்கென அணிசேர்க்கும் போட்டியில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஈடுபட்டு வந்த நிலையில் இலங்கை நேட்டோவிற்குச் சாதகமான முறையில் இராணுவத் தளவசதிகளை வழங்கி இருந்ததால் இலங்கையின் நட்பை மேலும் இறுக்கமாக்கும் நோக்கில் மேலைத்தேசம் இலங்கையின் கைத்தொழில்மயமாக்கலுக்கு உதவவேண்டிய நிர்ப்பந்தம் இருந்திருக்கும். எனவே வெளிநாட்டு ரீதியாகச் சாதகமான சூழல் அன்று நிலவிய போதிலும் உள்நாட்டில் இடதுசாரிகளை எதிர்கொள்வதற்காகக் கைத்தொழில் மயமாக்கலைக் கடைப்பிடிக்க ஐ. தே. க. தயாராக இருக்கவில்லையெனத் தெரிகிறது

கிழக்காசியாவில் கொங்கொங், தாய்வான், தென்கொரியா ஆகிய நாடுகளும், தென்கிழக்காசியாவில் மலேசியா, சிங்கப்பூர் போன்றனவும் புதிய கைத்தொழில் மயமாக்கலில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியடைந்துள்ளன. இவையனைத்தும் நேட்டோ சார்பு அரசுகள். இவை அரசியல் இராணுவரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இட அமைவுகளைக்கொண்டுள்ளவை. குறிப்பாக அமெரிக்காவுக்கு உயிர்நிலையமான அமைவிடங்களை இவை கொண்டுள்ளன. ஆதலினால் இவற்றை அரவணைத்து இவற்றின் போக்குக்கு ஓரளவுடன் பட்டுப் போகவேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இருந்தது. இந்த வகையில் இந்து சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடமும் நேட்டோவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

அமைவிட முக்கியத்துவத்திற்கு அப்பால் கொங்கொங்கினதும் தாய்வானினதும் புதிய கைத்தொழில்மயமாக்கலுக்கு சீனாவிலிருந்து தப்பி ஓடிவந்த முதலாளிகளினது பெரும் முதலீடுகள் பெரும் துணைபுரிந்தன எனக் கூறினாலும் தென்கொரியா மலேசியா போன்ற நாடுகளின் புதிய கைத்தொழில் மயமாக்கலுக்கு நேட்டோ சார்பு நாடுகளில் முதலீடுகள் பெரிதும் உதவின என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

தென்கொரியா, மலேசியா போன்ற தேசங்களில் ''நேட்டோவின் இராணுவத் தளங்கள் இருந்தமையாலும், உலகளாவிய மூலோபாயத்தின்படி இத்தேசங்கள் நேட்டோவிற்கு முக்கியமாக இருந்தமையாலும் மேற்படி தேசங்கள் தமது பேரம் பேசும் சக்தியை உணர்ந்து செயற்பட்டன. இதனால் மேற்படி தேசங்கள் தமது பேரத்தை அதிகரித்து முடிந்தளவு கைத்தொழில் மயமாக்கலில் ஈடுபடலாயின.

சிங்கப்பூர் மலேசியாவின் ஒரு பகுதியாய் இருந்த சூழலில் சிங்கப்பூரில் தனது இராணுவத் தளத்தைக் கொண்டிருந்த நேட்டோ மலேசியாவின் பேரத்திற்கு தொடர்ந்து செவிசாய்க்க வேண்டியிருந்தது. இப்பேரத்தினால் கணிசமான அளவு பருமனைக் கொண்ட மலேசியா அதிக வளர்ச்சியடைந்து செல்வது தமக்கும் எதிர்காலத்தில் பாதகமாய் அமைய முடியுமென்பதை உணர்ந்த மேலைத்தேசத்தவர் மலேசியாவில் இருந்து சிங்கப்பூரை பிரித்துவிடுவதில் வெற்றி கண்டனர். மிகச்சிறிய சிங்கப்பூரின் பேரம் மேலைத்தேசத்திற்குச் சவாலாய் இருக்கபோவதில்லை.

இவ்வாறு பார்க்கையில் இந்து சமுத்திரத்தின் மத்தியில் துறைமுக விமானப் போக்குவரத்து முக்கியத்துவத்தைக் கொண்டிருந்த இலங்கை, அந்த இலங்கையில் கடற்படை, விமானப்படைத் தளங்களை அமைக்கும் உரி

(9ம் பக்கம் பார்க்க)

### மறக்கமுடியாத உண்மைச்சம்பவம்

# விசாரணைக்கென்று கொண்டு சென்ற இராணுவம் அண்ணரைக் கொலை செய்தது!

ஊர் முழுவதும் மரண அமைதி குடிகொண்டிருந்தது இந்த வேளையிலும் யாரோ நடமாடுகிறார்கள் என்பதற்கு அறிகுறியாக, நாய்கள்குரைக்கும் சத்தம் கேட்கின்றன. அந்த நாய் குரைக்கும் சத்தங்கள் தொலைவில் இருந்து மெல்ல மெல்ல அண்மையில் வந்து எங்கள் அண்ணரின் வீட்டு நாயும் சேர்ந்து குரைக்கத் தொடங்குகிறது அத்தோடு எமது வீட்டுக்கு யாரோ வருகிறார்கள் என்பதற்கு அறிகுறியாக 'சப்பாத்தின்' ஒலியும் கேட்கின்றது. நான் கடவுளை வேண்டிக் கொண்டிருந்தேன், வந்தவர்கள் அண்ணரின வீட்டைக் கடந்துஅப்பால் செல்ல மாட்டார்களா?' என்ற ஏக்கமும் மனதில் தோன்றியது. நேரத்தையும் பார்த்தேன் சரியாக ஆறரையாகிறது.

அண்ணர் வீட்டு கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது. என்னோடு இருந்த அண்ணரின் பிள்ளைகளைப் பார்க்கின்றேன், எல்லாம் சின்னஞ் சிறுசுகள் மூத்தவனுக்கு 17 வயது. அடுத்த பொம்பிளைப் பிள்ளைக்கு 15 வயது. மற்றப்பிள்ளைகள் 13 வயது, 11 வயது, பத்து வயதுள்ளவர்கள். அவர்கள் என்னைப் பார்க்கின்றார்கள், எனக்கருகில் இருக்கும் எனது அண்ணரும் அண்ணியும் [ச. பேரின்பராசா 41 வயது] என்னைப் பார்க்கின்றார்கள். எங்கள் குடும்பத்தில் ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போகின்றது என்று என் உள் மனதில் இருள் சூழ்ந்திருந்தது.

சுமார் இருபது பேர்கள் எமது வீட்டுக்கு முன்னால் குழுமியிருந்தார்கள். சிலபேர் தமிழில் பேசிக்கொண்டார்கள் இராணுவத்தினரும் இருந்தார்கள், அவர்களுடன் ரெலோ, ஈ. என், டி. எல். எவ். உறுப்பினர்கள் இருந்தார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன்.

மூதூர் கிளிவெட்டிப் பகுதியில் இராணுவத்தாலும், தமிழர்களாலும் கைதுசெய்யப்பட்டு, பின் கை, கால் கட்டுப்பட்டு, கழுத்து வயிறு மர்மஸ்தானங்களை கண்டதுண்டமாக வெட்டியும், கண்களும் தோண்டப்பட்டு கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்ட சபாரத்தினம் பேரின்பராசாவின்சகோதரன் சபாரட்னம் கோணேஸ் தன் அண்ணனின் குடும்பத்துக்கு நேர்ந்த அவலத்தை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்தச் சம்பவம் 03-05-95 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நானும் அண்ணியும் பிள்ளைகளும் அவர்களைக் காலில் விழுந்து - எனது அண்ணனைக் கொண்டுசெல்லவேண்டாமென்று மன்றாடினோம். அவர்கள் விடுவதாக இல்லை.

ஒரு சிறு விசாரணைக்கு அழைத்துச் செல்கிறோம். விசாரணை முடிந்ததும் திருப்பிக் கொண்டுவந்து விடுகிறோம் என்றார்கள்.

ஆறு முப்பதுக்குப் போனவர் ஒன்பது முப்பது ஆகியும் அவரைக் கொண்டுவரவில்லை. அவர் வருவார் வருவார் என்று பார்த்துக் கண்ணும் பூர்த்துவிட்டது. விடிந்ததும் விடியாததுமாக அந்த மம்மல் வேளையில் அவரைத் தேடுவதற்காக பல இராணுவ முகாம்களுக்கு ஏறி இறங்கினேன். முகாம்களிலும் அப்படியான ஒருவரைக் கைதுசெய்யவில்லை என்று பதிலே வந்தது. எனக்கு நெஞ்சில் பலத்த வலி ஏற்பட்டது. ஆண்டவனை வேண்டிக் கொண்டேன். அவரை என் முன்னே கொண்டுவந்து நிறுத்துங்கள் என்று ஒவ்வொரு தெய்வத்தையும் வேண்டினேன்.

ஆனால் நான் கண்ட காட்சி என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அடுத்த நாள் 4ம் திகதி நான் தெய்வத்தைக் காட்டுப் பகுதியில் கை, கால் வெட்டப்பட்டு, இரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தார் அண்ணர். கண்கள், கால்கள் இரண்டும் கட்டப்பட்டுக் கிடந்தன. கழுத்து, வயிறு வெட்டப்பட்டிருந்தது. கண்கள் இரண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார்.

பின்பு பயத்தில் இராணுவ அனுமதியோடு அவரது இறுதிக் கிரியைகளை அந்தக் காட்டுப் பகுதியிலே செய்து முடித்தேன். அந்தப் பகுதியிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சிசெய்தேன்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இதுவரை அண்ணியும், ஐந்து பிள்ளைகளும் எங்கு போனார்கள் என்று தகவல் கிடைக்கவில்லை. நான் காட்டுவழியாக அலம்பில் வந்து விடுதலைப் புலிகளின் உதவியினால் மட்டுவில், சாவகச்சேரி 'பொன்னம்மான்' முகாமில் தங்கி இருக்கிறேன்.

அண்ணியும், ஐந்து பிள்ளைகளும் ஒரு அசம்பாவிதமின்றி இருக்கவேண்டுமென்று ஆண்டவனை தினம் தினம் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்.

ஆண்டவனும் அப்படிச் கருணைபுரிவான் என்று நம்பிக்கையோடு இருக்கிறேன்

தகவல்:
சு. சுபாஸ்
(வடமராட்சி செய்தியாளர்)

[வாசகர்கள் இப்படியான மறக்க முடியாத சம்பவங்களை எழுதி அனுப்பலாம்-]

வெளிவந்துவிட்டது !

வித்துவான்
பொன். முத்துக்குமாரன் [பி. ஓ. எல்.]
எழுதிய

★ தமிழ் மரபு ★

★ 5-ம் ஆண்டு புலமைப் பரிசுத் தேர்வு எழுதுவோருக்கும், உயர் வகுப்பு மாணவருக்கும், தமிழ் மொழியைப் பிழையின்றி எழுத விரும்புவோருக்கும் அருமையான ஒரு கைநூல்.

விலை ரூபா ௦0/

✶ பிரபல புத்தகசாலைகளில் பெறுக ✶

தொகையாகப் பெற
ஆனந்தா புத்தகசாலை,
யாழ்ப்பாணம். [ஏ-5035]

யாழ். நகரில் அதிசிறந்த
சைவ உணவகம்
சுகாதாரமாகவும், சுவையானதாகவும்
சிற்றுண்டி வகைகள்
ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

ஸ்ரீ தாமோதர விலாஸ்
(சைவ உணவகம்)

403, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [ஏ-5029]

25-6-1995 யாழ்ப்பாண

## சிறுகதை

# தாகம்

### இயல்வாணன்

"நீ என்ரை மகனைப் போலை" அவர் சொன்னதும் இவன் தனக்குள் பூரித்துப் போனான். உடலெல்லாம் சிலிர்த்தது; அங்கமெல்லாம் எதேதோ சுரப்புகள் நிகழ்ந்ததுபோல இருந்தது.

இத்தனை காலமும் இவன் நினைத்திருந்த, நினைக்கப் பழக்கப்பட்டிருந்த மரபு வழி வம்ச உறவுகளை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். அவையெல்லாம் எத்துணை போலியாகிவிட்டன என எண்ணும் போது மனது கனத்தது. இவற்றுக்கு அப்பாலான மனித உறவுகளை இப்போதுதான் இவன் ஆத்மார்த்தமாக உணர்ந்துள்ளான்.

அவரை இவனுக்கு கடந்த சில நாட்களாகத்தான் தெரியும். அண்மையில் இந்தப் பிரதேசத்தில் நடந்த சனசமூக நிலையத் திறப்பு விழாவில் இவனும் அதிதியாகக் கலந்துகொண்டிருந்தான். அப்போதுதான் அவர் இவனுக்கு அறிமுகமானார்.

தாம் காங்கேசன்துறையிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியுள்ளதாக அவர் அப்போது தமது அறிமுகத்தில் கூறினார்.

திறப்புவிழா நிகழ்வில் இவன் உரையாற்றிய பாணி தன்னைக் கவர்ந்ததாகவும், எளிமையாக, இலகுவாகப் பேசும் தன்மை இவனிடம் உள்ளதாகவும் அவர் அப்போது சொல்லியிருந்தார்.

அதன்பின்பு —

இப்போதுதான் அவரைச் சந்திக்கிறான். இவ்வளவு காலத்தில் இவன் அவரை மறந்துவிட்டான். அந்த இடம்பெயர்ந்தோர் முகாமிற்குள் அவன் தனது சக நண்பனுடன் நுழைந்தபோது, அவர்தான் இவனை அடையாளங்கண்டு அறிமுகமானார்.

அந்தப் பகுதியில் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு, இவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கென வந்த இவனையும், சக நண்பனையும் அவர் அழைத்துச் சென்றார். அடுக்கடுக்காகக் கோழிக் கூடுகள் போல, இரு கரைகளிலும் சிறு சிறு குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. நடுவே, மூன்றடி அகலமான பாதை நீண்டு இறுதிக் குடிசையுடன் முடிவடைகிறது. தரிசாய்க் கிடந்த நிலத்தைச் சீராக்கி முகாமமைத்துள்ளனர். இப்போது அந்த இடம் புதிதாகத் தெரிகிறது.

வீட்டின் முன்னால் ஆண்களும், பெண்களும், சிறிசுகளுமாய் அமர்ந்திருந்தனர். கீழே அடிவானிலிருந்து நிமிர்ந்த நிலவு ஒளியை எங்கும் சிந்திக்கொண்டிருந்தது. இவனையும், நண்பனையும் கண்ட அவர்கள் எழுந்துகொண்டனர்.

ஆச்சரியமாய்ப் பார்த்தனர்.

"இவர்தான் இந்தப் பகுதிப் பொறுப்பாளர்" என அவர் இவனை அறிமுகப்படுத்தினார். இப்போது இவனைச் சூழக் குழுமி நின்ற சிறுசுகள், இவனது இடது தோளில் இருந்து இடுப்புக்குக் கீழான முனை கீழ்த் தெரியத் தொங்கிய 'எம். செவின்டி' ரைபிளை அவனுடன் பார்த்தனர். சில துணிச்சல்காரர்கள் கிட்டவந்து அதனைத் தொடவும் செய்தனர்.

அந்தத் துணிச்சல்காரனில் ஒருவனை இவன் எட்டிப் பிடித்துத் தூக்கித் தோளில் இருத்தினான். அதைப் பார்த்து ஏனைய சிறுசுகள் கூவிச் சிரித்தனர்.

அதற்குள்ளாக —


வாங்கொன்றை எடுத்துக்கொண்டு ஒருவர் வந்தார். "வேண்டாமண்ணை. நானும் உங்களோடை நிலத்திலை இருக்கிறன்" என்று சொல்லியபடி, தோளிலிருந்தவனை இறக்கிவிட்டு நிலத்தில் அமர்ந்துகொண்டான்.

"உடுப்பெல்லாம் ஊத்தையாகப் போது" ஆச்சி ஒருவர் சொன்னார்.

அவர் எங்கோ சென்றுவிட்டார். இவனும், நண்பனும் அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடினர். அவர்களது வாழ்க்கை நிலைபற்றி வாழ்க்கைப் பிரச்னைபற்றி, விடுதலைப் போராட்டம் பற்றியெல்லாம் இவன் அவர்களுடன் கலந்துரையாடினான். நிறையத் தெரிந்துகொண்டான்.

ஒவ்வொரு தினமும் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களை அவன் அளந்துகொண்டான்.

சற்றுத்தள்ளி அமர்ந்திருந்தவர் தனது மனைவியின் காதிற்குள் ஏதோ சொல்வதும் அவள் கையை விரித்து குரல் வராமல் 'சீனி இல்லை' எனச் சொல்வதும் இவனுக்குப் புரிந்தது. தேனீர் தருவதற்குக்கூட வழியில்லாமல்வாழும் இவர்களது வாழ்வு நிலையை இவன் புரிந்துகொண்டான்.



சற்றுமுன் காணமல்போன அவர், இப்போது இரண்டு சில்வர்களில் தேனீரை நிரப்பி எடுத்துவந்தார். "ஏனையா சீனி, தேயிலையை இல்லாமல் நீங்கள் கஸ்டப்படேக்கை பிறகேன் எங்களுக்கும்..." என்றான் இவன்.

அப்போது அவர் இவனருகே வந்து,

"நீ என்ரை மகனைப்போல' அவரும் அப்படித்தான். நாங்கள் குடிக்காட்டாலும் எங்கடை பிள்ளையளுக்குக் குடுக்காமல் விடமாட்டோம்" என்று சொன்னபோது, இவன் உடலெல்லாம் பூரித்தது. நெஞ்சகப் பரப்பில் ஏதேதோ சுரப்புகள் நிகழ்ந்தன. கூடவே அம்மாவினதும், அப்பாவினதும் ஞாபகம் வந்தது'

இவன் கடைக்குட்டி என்பதால் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் அப்போது தனிக் கரிசனையாக இருந்தது. அப்பா இவனைச் சந்திரன் என்பார். அம்மாவோ உதயன் என்பார். இவனும் இப்போது, தான் சந்திரனாகவும், சூரியனாகவும் இருப்பதாய்ப் பெருமைப்பட்டிருந்தான். அன்பு, பாசம் எல்லாம் போலியாகப்போன பின்னர், இவனும் போலிப் பெருமைகளைப் புறந்தள்ளி விட்டான்.

இப்போது இவனது பெயர் கூட அப்பாவையும், அம்மாவையும் கடந்துவிட்டது. இவன் இசையமுதனாகிவிட்டான். உதயனும்' சந்திரனும் இவனிலிருந்து மறைந்துவிட்டன.

இப்போது—இவன், வம்ச உறவில் தன்னைத் தந்த அப்பாவையும் அம்மாவையும் நினைத்துப்பார்த்தான்.

கனடாவில் மொன்றியல் நகரில் எங்கோ ஒருமூலையில் சின்னதொரு பெட்டி வீட்டில் அவர்கள் வாழக்கூடும். இப்போது மொன்றியலில் காலை ஏழரை மணியிருக்கும். சூரியக் கதிர்கள் பனிமூட்டத்தைக் கலைத்துப் பாயத் தொடங்கியிருக்கும். இரவில் கொட்டப்பட்ட ஸ்னோக்கள் தொழிலாளர்களால் அப்புறப்படுத்தப்பட்டிருக்கும்.

அம்மா இங்குபோல அகப்பையைத் தூக்கி, அடுப்பை எரிப்பதற்குப் பதிலாக சில்வர் கரண்டியால் கொட்பிளேட்டில் சமையல் செய்துகொண்டிருக்கலாம். அப்பா தொட்டியில் வந்துவிழும் குளிர்ந்த குழாய் நீருடன், கொதி நீரையும் கலந்து குளித்து முடித்திருப்பார். இங்கே மின்சாரமில்லாததால் இந்த வாழ்க்கையை வெறுத்துத் தனது அதிபர் பதவியை உதறியெறிந்துவிட்டுச் சென்ற அவர், அங்கு இதைவிடக் கூடிய சம்பளத்தில் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் தொழிலாளியாகப் பணிபுரிகிறாராம். இனி அவர் வேலைக்கு கிளம்பக்கூடும்.

அக்கா, சின்னண்ணை, பெரியண்ணை எல்லாருமே அடுத்தடுத்து அருகருகேதான்உள்ளனராம். அக்காவின் புருசன் இங்கேயே சிறந்த விளையாட்டு வீரன். சிலவேளை அவர் அங்கு விளையாட்டுக் கழகமொன்றை உருவாக்கியிருக்கலாம். றெவ்றியாகவும் இருக்கக்கூடும்.

இவர்களெல்லாம் தன்னை நினைப்பார்களா? என இவன் தனக்குள் கேட்டுக்கொண்டான். இங்கே — மார்கழிப் பனியிலும் அதிகாலையில் குளித்துவிட்டுக் கோவிலுக்குச் செல்லும் அம்மாஅங்கே— வீதியில்படர்ந்திருக்கும் ஸ்னோவைக் கண்டுபயந்திருக்கலாம். விடியற்காலையில்தான் முன்பு குளித்துவிட்டுக் கோவிலுக்குப் போனதை அம்மா நினைத்திருப்பாளானால் தன்னையும் இந்த ஊரையும்கூடச் சிலவேளை தனது மனக்குறிப்பில் பதிக்கக்கூடுமென இவன் நினைத்தான்.

அவர் ஞாபகமூட்டிய பின்னர் தேனீரை எடுத்து அருந்தினான். நிலவு சற்று மேலெழுந்து, கூடிய இடங்களுக்குள் ஊடுருவி இருளை விரட்டி விட்டிருந்தது.

சின்னண்ணுவும்பெரியண்ணுவும் அகதிஅந்தஸ்துக்கோரிக் கனடாவிற்குள் நுழைந்து, அங்கு தம்மை ஸ்திரப்படுத்திக்கொண்ட பின்னர் அவர்கள் இவனை அழைத்தனர். அந்த அழைப்புக் கடிதம் கிடைத்த இரண்டு தினங்களுக்குள், இவன் வீட்டை விட்டு வெளியேறி, இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்.

அதன் பின்னர் பயிற்சி எடுத்துவிட்டு, ஆனையிறவில் காவலரனில் காவல் கடமை புரிந்துவிட்டு ஆறுநாள் விடுமுறையில் வீட்டிற்குச் செல்லும்வரை இவனுக்கு எதுவுமே தெரியாது. வீட்டிற்குச்சென்றபோது, அக்காவும் அத்தானும் கனடாவிற்குள் நுழைந்துவிட்டதை அறிந்தான். எவ்வளவு செலவு செய்தேனும் இவனை விடுவித்துக் கனடாவிற்கு அனுப்ப அப்பா சதா முயன்றும், தோற்றுப் போய்விட்டதாக அம்மா சொன்னாள்.

"உன்னைக் கையெடுத்துக் கும்புடுறன் ராசா! உதுகளை விட்டிட்டு அண்ணைவையோடை கனடாவுக்குப் போய் நல்ல பிள்ளையாய்இரு" என்றும் அவள் வேண்டினாள்.

இவன் ஒன்றுமே சொல்லவில்லை. அப்பா முதலில் ஆவேசத்துடன் பேசினார். பிறகு "உதுகளையெல்லாம் மறந்திட்டு அங்காலை போறத்துக்குறெடியாய் இரு. நானும் கொம்மாவும் பாஸ்போர்ட் எடுத்திட்டம். எல்லாருமாய்ப் போவம்" என்றார். இவன் எதுவுமே பேசாமல் வானையளந்தான். அப்பாவும், அம்மாவும் மாறி மாறி நிறைய ஓதினர். இறுதியாக இவன் ஒரு பெருமூச்சுடன் சொன்னான்.

"என்ரை முடிவிலை எந்த வித மாற்றமுமில்லை. நான் தொடர்ந்தும் போராடப் போறன்"

அப்பாவுக்கும், அம்மாவிற்கும் திடீர் அதிர்ச்சி!

"நானும் அவளும் போறது போறதுதான்" என அப்பா கத்தினார். அம்மா எதுவுமே பேசாது நின்றாள். இவன் அங்கிருந்து தூரத்தை நீட்டி வந்துவிட்டான் அப்பாவும் அம்மாவும்கூட, மேலும் தூரத்தை நீட்டி — எந்தக் கூக்குரலுக்கும் செவிசாய்க்காமல் சென்றுவிட்டனர்.

இப்போது நிலவு நன்றாக மேலெழுந்துவிட்டது. சிறுசுகள் மடிகளில் தூங்கிவிட்டன. அகதிமுகாமில் இருந்தபொது வானொலிப்பெட்டி, சைக்கிள் டைனமோ இயக்கத்தில் புலிகளின் குரல் செய்திகளை ஒலி பரப்பிக் கொண்டிருந்தது.

ஓ...... நினைவுகளில் நனைந்தொழுகும் போது, சூழல் மறக்கப்பட்டு விடுகிறதே!

'சேர்பியர்களின் தாக்குதல்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பொஸ்னியாவின் செபறனிக்கா நகரில் வாழும் பொஸ்னிய முஸ்லீம்கள் ஐ. நா. சபை வாகனங்கள் மேற்கொள்ளும் மீட்பு வேலைகளின்போது, அங்கிருந்துவெளியேற மறுத்து வருகின்றனர். தாம் அங்கிருந்து வெளியேறினால் சேர்பியர்கள் தமது நாட்டை முற்றாக ஆக்கிரமித்து விடுவார்கள் என்பதாலேயே அவர்கள் வெளியேற மறுப்பதாக, ஐ. நா. அதிகாரியொருவர் தெரிவித்தார்". காற்றில் கலந்து வந்த செய்தி, இவனை ஒரு கணம் நிறுத்தி மீளச் செய்தது.

இவன் மீண்டும் அம்மாவையும், அப்பாவையும், அவர்களைப் போன்றவர்களையும் நினைத்தான். இடைவெளிகளையும் கணித்துக்கொண்டான்.

"ஐயா, தாகமாயிருக்குது... கொஞ்சம் தண்ணி தருவீங்களா?" என்று இவன் கேட்டான். இப்போது நிலவு மேலும் உயர்ந்திருந்தது.

முற்றும்

---

# 21-ம் நூற்றுண்டில் முதுமையை போக்கும் முறைகள் கண்டுபிடிக்கப்படும்

மனிதனின் உடலைத் தூக்கத்தில் வைத்து, அப்படியே மூப்பின்றிப் பாதுகாக்கும்முறை ஜப்பானில் 2020ம் ஆண்டளவில் உருவாக்கப்படும் என்று 'ஜப்பானிய ஆய்வுகள்' புலப்படுத்துகின்றன.

21ம் நூற்றுண்டில் ஜப்பானில் விஞ்ஞான வளர்ச்சிகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை முன்கூட்டியே ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

2003ம் ஆண்டளவில் நகர்ப்புறக்கழிவுகளிலிருந்து எரியக்கூடிய பொருட்களைக் கண்ணுடி உலோகம் ஆகியவைகளையும் தானியக்கிமுறையில் தனித்தனி பிரிக்கவல்ல தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்படும்.

தொலைத் தொடர்புமூலம் வீட்டிலிருந்துகொண்டு நோய்களுக்குசிகிச்சையளிக்கப்படும். அலுவலக வேலைகளையும் வீட்டிலிருந்து செய்யக்கூடிய நிலைமைவரும்.

ஊனமுற்றவர்களைப் பராமரிக்க நர்ஸ் ரோபோக்கள் பல சேவைகளில் புழக்கத்தில் இருக்கும்.

2004ம் ஆண்டில்மின்கலத்தில் ஓடும் வாகனங்கள் வீதிகளில் காணப்படும். 2007ம் ஆண்டளவில் சூரியசக்திமூலம் குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்படும். மணிக்கு 1500 கி. மீ. வேகத்தில் ஓடக்கூடிய கார்கள் உருவாகும.

2009ம் ஆண்டளவில் வரண்ட பிரதேசங்களில், உவர் நிலங்களில் வளரக்கூடிய செடிகள் உருவாக்கப்படும், 2011ம் ஆண்டளவில் பசுபிக்கடலை இரண்டே மணி நேரங்களில் கடக்கும் விமானம் முந்நூறு பிரயாணிகளை சுமந்து பறக்கக்கூடியதாக உருவாக்கப்படும்'

2012ம் ஆண்டில் மின்காந்த உந்து விசையில் பயணம் செய்யும் கப்பல் உபயோகத்தில் இருக்கும்.

2013ம் ஆண்டளவில் புற்று நோய் ஜீவ அணுக்கள் வளர்வதை தடுக்கும் முறைகள் கண்டுபிடிக்கப்படும். விண்வெளியில் பயன்படுத்தும் செமி கண்டக்டர்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை விண்வெளியில் இருக்கும். விண்வெளிக்கும் பூமிக்கும் இடையில் போக்குவரத்துத் தொடர்பு ஏற்படுத்தும் ஸ்பேஸ் விமானங்கள் பாவனையில் இருக்கும். மூளை எப்படி உருவாகிறது எப்படி வளர்கிறது என்று கண்டுபிடிக்கப்படும்.

2015ம் ஆண்டளவில் சந்திர மண்டலத்தில் விண்

(8ம் பக்கம் பார்க்க)

# கவிமலர்

## ஈன்றவளே பள்ளி எழுந்தருளாயே..

### வான் நோக்கும் அகதி

— அ. செ. மு. —

[அ. செ. மு. ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர்களில் ஒருவர், அவர் எழுதிய ஆக்கங்களில் ''மனிதமாடு'' ஒரு அற்புத சிருஷ்டி. ஒரு காலத்தில் ''ஈழநாடு'' வாரமலரின் ஆசிரியராக அலங்கரித்தவர் என்பது றிப்பிடத்தக்கது.]

காக்கைகளே காக்கைகளே
கரவாது வந்துண்ணும் காக்கைகளே
வலி வடக்கு நாடு கண்டா வருவீர்கள்
கறும்பனைக் காடிருந்த வருவீர்கள்
நாட்டு நடப்பு சொல்வீரா — பனைக்
காட்டு வளம் நவில்வீரா
நம் வீடு வாசல் பார்த்தீரா
தோட்டம் துரவு . கண்டீரா
காய்த்தது கனிந்தது உண்டீரா
செத்துப் போனவர் ஆர்
சாகாதிருப்பவர் ஆர்
அவர் சேதி தெரியுமா
ஆர் ஆர் எங்கெங்கே
அதுதானும் அறிவீரா
கிழடுகளும் குஞ்சு
குருமானுமாய்
அநாதரவாய் அந்தரித்து
''ஆமி'' கையில் அகப்பட்டோர்
அவர் பாடு என்னுச்சு
பறந்தடித்து பார்த்ததுண்டா
கேட்டதுண்டா
ஊர்க்காட்டுச் சேதியெல்லாம்
ஒளியாமல் மறையாமல்
உரைத்திடுவீர் காக்கையாரே
கரையோரம் பறந்தீரா
வெடி முழங்கும் கோட்டைக்
கொடிக்கப்பல் பார்த்தீரா
இடிமுழங்கி எக்காளமிட்டதா
எறிகணை பாய்ந்ததா
சுருண்டு வீழ்ந்தீரா இல்லை
அருண்டெழுந்து பறந்தீரா
வானுயர் தருவின் தேன்படு
குண்டொன்றடித்தீரா
அந்நிய அரக்கர் அவர்
கொள்ளித்தேன் கொட்டி குதித்ததொரு
பேய்க்குரங்காய்
துள்ளி எழுந்தாரோ
கள்ளு மீசை முறுக்கினரோ

**மண்ணகத்தில் குச்சொடித்து**
**வாய் வல்லமையாய் அதை அடுக்கி**
**விண்ணகத்தே மெத்தைக்**
**கூடுகட்டி**
**விண்ணுனமாய்க் கரையும்**
**விடிநிலவுக் காக்கையரே**

ஆண்டாண்டு காலமாய்
நமதடி வளர்த்தெடுத்து
ஆளாக்கி வாழவைத்த
பொன்னுன பூமி அது — இன்றெல்லாம்
சுடுகாடாய் முதுகாடாய்
பாழ்பட்டுக் கிடக்குமோ!
பசுமை அழித்து
தெள்ளுதமிழ் தேன்இனிதாக
இன்புற்ற தேனீக்கள்
தெறிகெட்டு எங்கெங்கோ
எழுந்தோடிப் பறந்தனவோ!
நம் பூமி வெறிச்சோடிப்
போனதோ வெட்டவெளி
ஆக பாலை பற்றிப் போச்சோ!
யாதும் ஊராய்
யாவரும் நம் கிளையாய்
கேளிராய் தாயகம்
துறந்து இடம்பெயர்ந்து
புலம்பெயர்ந்து புகலிடம்
தேடி ஏகிலர் ஆக
வாழ்கின்றோம்
வானமே கூரையாய்
பூமியே யணையாய்
உருண்டு புரள்கின்றோம்
யாம் நோக்கும் காலை
வானம் புவி நோக்கும்
நோக்காக்கால் தானேக்கி
மெல்ல நகும்
நாட்டை நினைப்போமா
எந்த நாள் போயினிக் காண்போமென்று
பிறந்த வீட்டை நினைப்போமா!
நம் நெஞ்சம் விம்மி விம்மி
விம்மி விம்மி அழுங்குரல்
கேட்டிலையோ காற்றே.... ..........
மாலை வடிவேலவர்க்கு நெஞ்சுவக்க
நாமெழுதும் ஓலை
கிறுக்காச்சுதே! — நம்
உள்ளமும் கிறுக்காச்சுதே!
வானவன் மாதேவி
நித்திலம் கொழிப்பதொரு
நீலத்திரைக் கடல்
அதன் ஓரத்திலே
நீள விரிந்ததொரு இரத்தினக்
கம்பளமோ! நிதமும்
மங்கொளிர்ந்திடும் நிலமகளே
இன்னும் துயிலுதியோ!
ஈதென்ன உறக்கமோ!
மதலையழுதெழுப்பும், தாய்
துயில்வாளோ!
குதலை மொழிக்கிரங்காதொரு
தாயோ!
தொழுதுணை வாழ்த்தி
வணங்குதற்கிங்குன்
தொண்டர் பல்லாயிரர்
சூழ்ந்து நிற்கின்றோம்!
விழுதுயில்கின்றனை, இன்னும்
எங்கள் தாயே! —
ஈன்றவளே பள்ளி
எழுந்தருளாயே.

— வாடைக்காற்றுடி

## பெண்கள் உலகம்

# நேர்மை, துணிச்சல், சாதனை

# இவைதான் கிரண்பேடி

இந்தியாவின் தலைநகர் டெல்லியிலே ஒருநாள்......

இரண்டு சீக்கியக்குழுக்களுக்கிடையில் மோதல் ஒன்று வெடித்தது. உருவிய வாள்களுடன் இரண்டு குழுக்களும் வீதியில் 'ஊர்வலம்'புறப்பட,

திடீரென — கையில் கத்தியைச் சுழற்றியபடி அந்தக் கும்பலை எதிர்கொண்டார் ஒரு உயர் பொலிஸ் அதிகாரி- முயற்சியில் இறங்கினர்.

என்ன ஆச்சரியம்! பயங்கரக் குற்றவாளிகள் பணிந்து மனம் மாறினர்கள். சிறைச்சாலையைச் சீர்திருத்தக்கூடமாக மாற்றிய கிரண் பேடியின் சாதனையைப் பத்திரிகைகள் வியந்து பாராட்டின.

போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையாளராக டெல்லியில் கடமையாற்றும்போது கிரண் பேடியின் உள்ளத்தில் பீறிட்டது. அவர் அசையவில்லை. 'நீதி வென்றேதீரும்' என்று துணிவோடு எதிர்கொண்டார்.

ரெனிஸ் விளையாட்டில் மிகவும் திறமைசாலியான கிரண் அந்த விளையாட்டில் நேர்மையைத்தான் கற்றுக்கொண்டவர்.

எந்த வேலையை எடுத்தாலும் அதை முதல்தரமாகவும் குறிப்பிட்ட நேரத்திலுள்ளும் முடித்துக் கொடுப்பதில் குறியாக இருக்கும் சுபா சிறிது நேரத்திலேயே இயல்பு நிலை திரும்பியது.

அந்த அதிகாரி— கிரண் பேடி.

ஆசியாவின் மிகப்பெரிய விருதான 'மகசேசே' விருதை 1994இல் பெற்றுக் கொண்ட வீரப்பெண்மணிதான் இந்த கிரண் பேடி.

துணிச்சலின் மறுபெயர்— கிரண்.

நேர்மையின் மறுபெயர்— கிரண்-

''அநீதியைச் சகித்துக் கொள்ளமாட்டேன்'' என்று கனல் தெறிக்கக் கூறும் இந்தப்பெண், குழந்தையாயிருந்தபோதே தவறு நடப்பதைக் கண்டால்,

''நான் பெரியவளானதும் என்ன செய்கிறேன் பார்'' என்றுதான் கூறுவாளாம்.

நீதி கிடைப்பதற்கு விலை கொடுத்தே ஆகவேண்டியிருக்கிறது.

அதுவும், 'ஊழலின் பிறப்பிடம்' என்ற உலகப் பொது அபிப்பிராயத்தைத் தனதாக்கிக்கொண்ட காவல்துறை என்றால் கேட்கவும்வேண்டுமா?

ஒரு பொலிஸ் அதிகாரியாய் கிரண் பேடி எதிர்கொண்ட சோதனைகளும் வேதனைகளும் ஏராளம். ஆனாலும் கொள்கை மாறாமல் நிமிர்ந்து நிற்கிறார்.

டெல்லியில் உள்ள திகார் சிறைச்சாலைதான் ஆசியாவின் மிகப் பெரிய சிறைச்சாலை. பயங்கரமான குற்றவாளிகள் உள்ள இந்தச் சிறைச்சாலையைப் பொறுப்பெற்றார் இந்தத் துணிச்சல்காரப் பெண்

பொலிஸ் அதிகாரி! ஏற்கெனவே பல கில்லாடி'களைப் பந்தாடிய அனுபவம் கிரணுக்கு இருந்தது. எனினும் திகார் சிறையை இவர் அணுகிய முறை வித்தியாசமாய் இருந்தது. தியானம், போதனைகள் என்று கைதிகளின் மனோநிலையை மாற்றும் இந்தக் கிரண் பேடி, 'கிறேன்' [Crane] பேடி என்றே அனைவராலும் குறிப்பிடப்பட்டதற்கு ஒரு சுவாரஸ்யமான காரணம் உண்டு!

'No Parking' பகுதியில் எக்காரணங் கொண்டும்— எத்தனை அவசியமென்றாலும்— ஒரு வாகனம்கூட நிற்பாட்டியிருக்கக்கூடாது என்பது இவரது கண்டிப்பான உத்தரவு. இந்த உத்தரவு மீறப்படும் போதெல்லாம், குறிப்பிட்ட அந்த வாகனத்தை எங்கிருந்தோ வரும் ஒரு கிறேன் [Crane] 'லபக்' எனத் தூக்கிச் சென்றுவிடும்.

கிரண்பேடி, கிறேன் பேடி ஆகியதன்காரணம் இதுதான்.

'யதார்த்தவாதி வெகுசன விரோதி' என்பதற்கிணங்க, கிரண் பேடி.

எங்கே போனாலும் பிரச்சினைகளும் சர்ச்சைகளும் அவரை விடாமல் ஒட்டிக் கொள்கின்றன.

உதாரணம்:

1992இல் கிரண் பேடியின் மகள் சுக்ருதி, தேர்வில் 89 வீதப் புள்ளிகள் பெற்று, தகுதியுள்ளவர்கள் பட்டியலில் முதலிடம் பெற்று, அரசின் விதிமுறைகளின்படி மிஜோராம் மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெற்றாள்.

சுக்ருதி மிஜோராமைச் சேந்தவரல்ல என்பதைச் சாட்டாக வைத்து அந்த அனுமதியை மறுத்து மாணவர்கள் வன்முறைப் போராட்டம் துவக்கினர்கள்.

சுக்ருதியின் அனுமதியில் முறைகேடு எதுவுமில்லை என்றாலும் அதை விட்டுக்கொடுத்துவிடும்படி மிஜோராம் முதல்வர் கோரியபோது கிரன் அதிர்ந்துபோனர்.

'தகுதி அடிப்படையில் கிடைத்த அனுமதி இது. திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வன்முறைக்காக அதை ஏன் விட்டுக்கொடுக்கவேண்டும்' என்ற சத்திய ஆவேசம்தான் இந்தப் பெண்மணியின் வெற்றிக்குக் காரணம்.

ரெனிஸ் விளையாட குறைந்தது 10 கி. மீ. தூரமாவது ஓடியிருக்கவேண்டும் என்றால் - கிரண் 14 கி. மீ. ஓடியிருப்பார் - வேலைப் பளு காரணமாக, 13 வருட ரெனிஸ் விளையாட்டை இப்போது கைவிட்டபோதிலும்,

புத்தகங்கள் படிப்பதற்கு எப்படியென்றாலும் கிரண் நேரம் ஒதுக்கிவிடுவார்.

'ஒவ்வொரு தலைமுறையையும் உருவாக்கிப் பேணிவளர்க்கின்ற பெரிய சக்திதான் பெண்' என்பது கிரண் பேடியின் கருத்து.

ஆண் செய்கின்ற எல்லா வேலைகளையும் ஒரு பெண்ணால் செய்யமுடியும் என்பது மட்டுமல்ல ..... அதற்கு மேலும் கூடச்செய்யமுடியும்'' என்பது அவருடைய ஆழமானகருத்து. அதுவே உண்மையும்கூட.

- சித்தாரா

## கின்னஸ் சாதனைகள்

★ உலகத்தில் நாணயத் தாள்களின் அளவு பெரிதாக அச்சிடப்பட்டது 1368—1399-ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆகும். சீனாவில் மிங் மன்னர் காலத்தில் அச்சிடப்பட்ட இந்த நாணயத் தாளின் நீளம் 13 அங்குலமாகும். அகலம் 9 அங்குலமாகும்.

★ உலகத்தில் அதிக கார்களை ஜேர்மனியில் உள்ள 'வொக்ஸ் வகன்வர்க்' கம்பனிதான் உற்பத்தி செய்கின்றது. இந்தக் கம்பனியில் 60,000 ஊழியர்கள் தொழில் புரிகின்றார்கள்.

★ அமெரிக்காவில் உள்ள டி.. சு. என்கின்ற பென்டகன் நிறுவனத்தினரால் கூடிய தொலைபேசி அழைப்புகள் எடுக்கப்படுகின்றன. நாளொன்றுக்கு 34,500 தொலைபேசி அழைப்புக்கள் வெளிச்செல்கையில் மில்லியன் அழைப்புக்கள் உள்வருகின்றன.

★ உலகத்தில் அதிக நிறையுடைய மணிக்கூடு கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடைபெற்ற எக்ஸ்போ 86 கண்காட்சியில் வைக்கப்பட்டது. இது சுவிட்சர்லாந்தில் செய்யப்பட்டது. 80 அடி உயரமான இந்த மணிக்கூடு 35 தொன் பாரம் கொண்டது.

மாநகராட்சி மன்று 25-6-1995

# கோடீஸ்வரர் றெக்பெல்லரின்

# எண்ணைச் சாம்ராச்சியம்

ஐக்கிய அமெரிக்காவின் ஆரம்ப கால பொருளாதார வளர்ச்சியில் ஜோன் றெக்பெல்லரின் பங்கு மிகப் பெரியதாகும். எண்ணை வியாபாரத்தில் திறமையான ஆனால் இரக்கமில்லாத வழிவகைகளைக் கையாண்டு பாரிய நிறுவனங்களை நிறுவி அவையே அத்துறையில் ஏகபோகஉரிமையைக் கொண்டவைகளாகச் செய்தவர் றெக்பெல்லராவார். பெரியமீன் சிறுமீன்களை விழுங்குவது போன்ற செயலினால்தான் அவர் தனது எண்ணைச் சாம்ராச்சியத்தைக் கட்டி எழுப்பினார். 1839—1933 காலப்பகுதியில் வாழ்ந்த றெக்பெல்லர், ஸ்ராண்டட் எண்ணை நிறுவனத்தின் உயர் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் காரணகர்த்தாவாக விளங்கினார் அவரதுநிறுவனம் எண்ணைசுத்திகரிப்பிலும் குழாய்கள் மூலம் அவற்றை எடுத்துச் செல்வதிலும் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்தது அந்த நாளில் உலகத்தின் தலைசிறந்த செல்வ அதிபதியாக —1000 கோடி டொலருக்கு அதிபதியாக றெக்பெல்லர் விளங்கினார்.

றெக்பெல்லர் ஒரு பல்பொருள் அங்காடியில் ஆரம்பத்தில் புத்தகம் கட்டுபவராக இளமையில் வேலைக்குச் சென்றார். ஒரு வாரத்தில் 15 டொலர்ஊதியம் பெற்றஅவர் 'பணக்காரனாக ஒருநாள் வருவேன்' என்ற எண்ணத்தில் மூன்று வருடங்களில் 800 டொலர்களைச் சேகரித்தார். பின்னர் தனது 22 வது வயதில் சொந்தத் தொழிலில் இறங்கியவர் நாலு வருடங்களிலேயேதனது மூலதனத்தை ஒரு லட்சம்டொலராக உயர்த்திக்கொண்டார். அதன்பின் தனது சகல பணத்தையும் எரிபொருள் சுத்திகரிப்பு என்னும் புதிய தொழிற்துறைக்கு ஒதுக்கினார்.

உருக்கின் முக்கியத்துவம் போல எரிபொருள் தயாரிப்பும் அதன் பாவனையும் எண்ணிலடங்காதவாறு உயர்ச்சி கண்டது. 1850 காலவரை 'கல் எண்ணெய்' என அழைக்கப்பட்ட எரிபொருள் - மருந்துத் தேவைக்கே பயன்படுத்தப்பட்டது. 1855களில் இது சுத்திகரிக்கப்பட்டுமண்ணெண்ணெய் ஆக்கி விளக்கு எரிக்கப் பாவிக்கப்பட்டது. இது திமிங்கில எண்ணெயிலும் பார்க்க சிறந்ததாகவும் மற்றும் வழுக்கல் பாவனைக்கு சிறந்ததாகவும். காணப்பட்டது.

1849ல் தங்கவேட்டைக்கு மக்கள் கலிபோனியாவுக்கு ஓடியது போன்று - 1859ல் மேற்கு பென்சில்வேனியாவில் முதலாவது எண்ணெய்க்கிடங்கு தோண்டப்பட்டபோது இந்த இடத்துக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டது. ஒரு ஏக்கர் காணியே ஒரு சொற்ப டொலர் பெறுமதியாக இருந்த காலம்மாறி ஒரு சதுர அடிக்காணிப் பெறுமதி நூறு ஆயிரம் டொலர்களென உயர்வு கண்டது. புதிய நகரங்கள் திடுதிடுப்பென இங்கே எழுந்தன. மண்ணெண்ணெய்க்கு உலகில் பெரும் கிராக்கி ஏற்பட்டது. சிவில் யுத்தம் நடைபெற்றபோதும் எரிபொருள்தொழிற்துறைபாரிய வளர்ச்சிகண்டு 1865ல் ஐக்கிய அமெரிக்காவின் ஏற்றுமதிகளில் நாலாவது இடத்தைப் பிடித்துக்கொண்டது.

## றெக்பெல்லருடைய வியாபார தந்திரம்

புகையிரதப் பாதை மூலம் எடுத்துச் செல்வதற்கு ஏனைய கம்பனிகளிலும் பார்க்க 'ஸ்ராண்டட் எண்ணெய்க் கம்பனிக்கு'' கிடைத்த கழிவு அதற்கு ஒரு வெற்றியாகும். இந்தக் கம்பனி புகையிரதக் கம்பனிகளுடன் பல இரகசிய ஒப்பந்தங்கள் செய்து ஏனைய கம்பனிகளிலும் பார்க்க காவு கூலியை 25%—50% வரையான கழிவைப் பெற்றுக்கொண்டது. அத்தோடு போட்டியாளர்களுடைய எண்ணெய் விநியோகப் போக்கு வரவு பற்றிய தகவல்களையும் புகையிரதக் கம்பனிகள் ஸ்ராண்டட் எண்ணெய்க் கம்பனிக்கு வழங்கி வந்தது.

றெக்பெல்லருடைய போட்டியாளர்கட்கும் இவருடைய தயவுதாட்சண்யம் அற்றபோக்கு நன்கு தெரிந்திருந்தபோதிலும் ஒரு இளம் பெண் எழுத்தாளர்தான் இதனை முழுமையாக நிதர்சனப்படுத்தினாள். 'இடா டார்பெல்' என்னும் பெண் எழுத்தாளர் 1993ல் மாக்லோ சஞ்சிகையில் தொடர்ச்சியான, திறமையான கட்டுரைகள் மூலம் றெக்பெல்லரின் இரகசிய ஒப்பந்தங்களையும் அவர் பாவித்த அழுத்த முறைகளையும் வெளிச்சத்துக்கு கொண்டுவந்தார். ஸ்ராண்டட் ஒயில் கொம்பனி தனது பழைய பெயர்களில் எப்படித் தொழில்களில் ஈடுபடுகிறது என்பதனையும் ஏனைய கொம்பனிகளை எவ்விதம் கட்டுப்படுத்துகின்றது என்பதனையும் தெரிவித்தார். அவரின் கம்பனிகள் காரியாலய பையன்களையும், காரிய தரிசிகளையும் சிலவேளை பாவித்து 'போலி இயக்குனர்களைக் கொண்டிருந்திருக்கிறது என்பதனை அவர் சுட்டிக் காட்டினார். 1882ல் ஸ்ராண்டட் எண்ணெய் நிறுவனம் ஒரு இரகசிய ஒப்பந்தத்தின் மூலம் 40 கம்பனிகளை தனது ஒரே நிர்வாகத்தின் கீழ்

(9ம் பக்கம் பார்க்க)

மருத்துவம்

# தீராத வியாதிகளை தீர்த்துவைக்கும்

# ஹோமியோபதி சிகிச்சை முறை

தத்துவமும், நடைமுறையும் இணைந்து செல்லும்போது விஞ்ஞானமாகிறது. மனிதனின் அனுபவம் வளர, வளர விஞ்ஞானம் வளர்கிறது. இதனைஒட்டியே ஹோமியோபதி மருத்துவ விஞ்ஞானமும் தோன்றி வளர்ந்திருக்கிறது.

கந்தர்மடத்தைச் சேர்ந்த ஹோமியோபதி டாக்டரான எம். வி. தில்லைச்சந்திரனைப் பேட்டி கண்டதில் ஹோமியோபதி பற்றி பல சுவையான விஷயங்களை அறியக் கூடியதாக இருந்தது.

ஹோமியோபதி வைத்தியம் என்றால் என்ன?

இது ஓர் உயர்ந்த ஜெர்மன் நாட்டுவைத்திய முறையாகும். இந்த வைத்தியத்தை 18ம் நூற்றாண்டில் டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்ற ஜெர்மன் நாட்டவர் கண்டு பிடித்தார்.

இந்த வைத்தியத்தின் தத்துவமென்ன?

சுகதேகி ஒருவர் என்ன மருந்தை அதிகம் பாவிக்கின்றாரோ அதனால் ஏற்படும் நோயை அதே மருந்தை ஹோமியோபதி முறைப்படி வீரியப்படுத்திக் கொடுத்தால் அந்நோய் சுகமாகும்,

எப்படிப்பட்ட நோயாளிகள் தங்களிடம் சிகிச்சைக்கு வருவார்கள்?

நாட்பட்ட அல்சர், மனநோய், சர்மவியாதிகளான ஸோராஸிஸ், பாலுண்ணிகள் எக்ஸிமா, வெண்குஷ்டம் [Leucoclerma] நரம்பு வியாதிகளான [Cervical Spondylities, Rheumatic Chorea], மூளைக்கட்டிகள் [Brain-tumors] தைராய்ட் வீக்கம், [Goitor] போன்றவற்றிற்கும் அதிகமாக மலட்டுத்தன்மைக்கு சிகிச்சை பெறுபவர்களும் வருகின்றார்கள்.

Rheumatic Chorea [வாத நடுக்கம்] என்ற நோய்க்கு யாருக்கு சிகிச்சை செய்தீர்கள்?

உசனைச் சேர்ந்த ஒரு வயோதிபருக்கு சுமார் மூன்று வருடங்களின் முன்பு குணமாக்கினேன். தற்சமயம் 27 வயதுடைய ஒரு வாலிபனுக்கு ஒரு மாத சிகிச்சையில் பூரண சுகமடைந்து இன்று தொழில் செய்கிறார் தொடர்ந்து சிகிச்சையும் பெறுகின்றார்,

மூளைக்கட்டி [Brain Tumor] அறுவைச் சிகிச்சையின்றி மாற்றமுடியுமா?

சாவகச்சேரியைச் சேர்ந்த ஒரு பிரபல சங்கீத ஆசிரியை இந்நோயினால் சுமார் 10 வருடங்கள் பீடிக்கப்பட்டிருந்தார். ஒரு காலும், கையும் வழங்காமலும் தொடர்ந்து தலையிடியினாலும், படுத்து நித்திரை செய்ய முடியாமலும் அவஸ்தைப்பட்டார். இந்தியாவில் பிரபல சத்திர சிகிச்சை நிபுணரிடம் காட்டியதில் மூளையின் உள்பக்கத்தில் கட்டி இருப்பதாகவும் சத்திர சிகிச்சை செய்ய முடியாது என்றும் கூறிவிட்டார். சுமார் ஏழு மாத ஹோமியோபதி சிகிச்சைபெற்று சுகமாகி பத்துவருடத்தின் பின் அவவின் கச்சேரி பக்கத்திலுள்ள கோவிலில் நடைபெற்றது இதை அவ்வூர் சனங்கள் நன்கறிவர்.

கழலை கட்டிகள் [Goitor] மாற்றிய அனுபவம் எதாவது உண்டா?

22 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணுக்கு கழுத்தில் சுமார்½ றெனிஸ்போல் அளவு கட்டி எட்டு வருடங்களாக இருந்தது. சத்திரசிகிச்சை தான் ஒரே வழி என்று சத்திரசிகிச்சை நிபுணர் கூற என்னிடம் ஒன்றரை மாத ஹோமியோபதி சிகிச்சை பெற்று சுகமடைந்தார். தற்சமயம் தொடர்ந்து சிகிச்சை பெறுகின்றார்.

Cervical Spondylities என்ற நோயை ஹோமியோபதியால் மாற்ற முடியுமா?

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வவுனியாவில் வேலை செய்யும் உயர் அதிகாரி ஒருவருக்கு இந்நோய் ஏற்பட்டது. யாழ். ஆஸ்பத்திரியில் மூன்று மாதமும் பின் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் அதன்பின் இந்தியாவிலுள்ள வேலூர் ஆஸ்பத்திரியிலுள்ள நரம்பு சத்திரசிகிச்சை நிபுணரிடம் காட்டியதில் சத்திரசிகிச்சை தான் ஒரேவழி என்று கூற, நோயாளி பாபாவைத் தரிசிப்பதற்கு புட்டபத்தி சென்ற இடத்தில் போபால் டாக்டர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் ஆலோசனையின் பெயரில் ஹோமியோபதி வைத்தியம் என்னிடம் இரண்டு மாதம் செய்து சுகமடைந்தார்.

மறக்கமுடியாத வேறு சம்பவம்.

சுமார் 8 வருடங்களாக ஒரு பெண்மணி இரு கண்ணும் தெரியாதிருந்தார். கண்ணில் ஒரு பிழையும் இல்லை. ஆனால் நரம்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கண் சிகிச்சை நிபுணர்கள் கூற, என்னிடம் இச்சிகிச்சை பெற்று இப்போ வெளிச்சத்திற்கும் இருட்டுக்கும் வித்தியாசம் தெரிவதாக கூறுகின்றார். தொடர்ந்து சுகிச்சை பெறுகின்றார்.

மலட்டுத் தன்மைக்கு இச்சிகிச்சை பலனிக்குமா?

பெண்களின் கர்ப்பப் பையிலுள்ள சில குறைகளை இச்சிக்சை மூலம் நிவர்த்தி செய்தால் நிச்சயம் மகப்பேறடைவர்.

ஆண்களின் விந்து உற்பத்தியைக் கூட்டுவதற்கு அரிய பல மருந்துகள் இருக்கின்றன, ஒரு சில மாதங்கள் மட்டும் பாவித்தால் பின் சிகிச்சை தேவையில்லை. விந்து தொடர்ந்து உற்பத்தியாகிக்கொண்டே இருக்கும். விந்து பரிசோதனை மூலம் காணக்கூடியதாக இருக்கும்.

மனநோய் வருவதற்கு யாது காரணம்?

பரீட்சையில் தோல்வி, காதல் தோல்வி, விபத்துக்கள், அதிர்ச்சிகள் இவை காரணமாகவும், தாழ்வு மனப்பான்மை, பொறாமை, மாயைத்தோற்றம், மது வகைக்கு அடிமைப்படல் போன்றவற்றினாலும் வரலாம். இவர்களில் சிலர் ஆபத்து நிறைந்தவர்களாகவும், சிலர் தீங்கற்றவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் ஒரு முறை மனநோய் வந்தவர்களைச் சமூகம் ஒதுக்கி வைக்கின்றது. பொதுமக்கள் அஞ்சுகின்றனர். மணம் செய்ய ஒருவரும் முன்வருவதில்லை. தற்கொலைக்கு காரணம் மனநோய்தான். தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களை ஹோமியோபதி சிகிச்சைக்கு உட்படுத்தினால் மீண்டும் தற்கொலை எண்ணமே வராது. இன்றைய போர்க்கால சூழ்நிலையில் மனஇயல் ரீதியாகவும், உள இயல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் எம் மக்களுக்கு இச்சிகிச்சை மிக மிக இன்றியமையாதது.

## டாக்டர் தில்லைச்சந்திரன் பேட்டி


★ தெளிவு ★ உறுதி ★ நியாயவிலை

★ றபர்ஸ்ராம்ஸ் ★ பிளாஸ்ரிக்நேம்போட்
★ புஸ்ஸர் ஸ்ராம்ஸ் ★ ஸ்கூல் பட்ஜ்
★ விளம்பர போட் ★ நம்பர் பிளேட்

யாவும் மூன்று மொழிகளிலும் செய்பவர்கள்

வீமா றபர் மாடம்

272, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

(ஏ 5025)




ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

ஸ்ரீ வாணி நகை மாடம்

தங்க நகை வியாபாரம்

173, லெப் கேணல் சந்தோசம் வீதி, [கஸ்தூரியார் வீதி] யாழ்ப்பாணம்

(ஏ 5028)



# சிறுவர் அரங்கம்

குட்டிக்கதை

## சூழ்ச்சியின் வீழ்ச்சி

ஒரு காட்டிலே ஒரு கிழச்சிங்கம் ஆட்சிசெய்து வந்தது. அது மிகவும் நல்ல சிங்கம். எவருக்கும் தீங்கு செய்யாது. ஆனல் அதற்குக் கோபம் வந்தால்... என்ன நடக்கும்என்று கூறமுடியாது. அந்தச் சிங்கத்தை கொன்று, தான் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சிசெய்வதற்கு ஒரு நரி திட்டம் போட்டது.

ஒருநாள் — அரண்மனையில் சிங்கம் அரியணையில் அமர்ந்திருக்க, அருகே மந்திரிகளும் பிரதானிகளும் வீற்றிருந்தனர். திடீரென நரி ஓடிவந்து ''அரசே! தங்களுடைய இராச்சிய எல்லையில் ஒரு சிங்கம் தங்களைப்பற்றி அவதூறுகப் பேசி, போருக்கு அழைப்பு விடுக்கிறது'' என்று கூறியது. அதைக்கேட்டதும் சிங்கத்தின் முகம் இருண்டது. ''உண்மைதானு நரியாரே?'' என்று அது கேட்டது. ''உண்மைதான் அரசே!'' என்று நரி கூறியது. அவ்வளவுதான் தாமதம். சிங்கம் ஆவேசத்துடன் நரியை அழைத்துக்கொண்டு விரைந்தது நரி மலையுச்சிக்குக் கூட்டிச் சென்றது. அந்த மலை உச்சிக்குக் கீழே ஒரு பெரிய ஆறு ஓடியது. அதில் சிங்கத்தின் முகம் தெரிந்தது. ''உடனேயே பாய்ந்து, அதோ தெரியும் சிங்கத்தைக்கொன்று விடுங்கள்'' என்றது நரி. சிங்கத்துக்கு நரியின் திட்டம் விளங்கிவிட்டது. அவ்வளவுதான் தாமதம்! அடுத்த நிமிடம் நரியின்மேல் ஓர் அசுரப் பாய்ச்சல். அவ்வளவுதான்! நரி பாதாளத்தில் ''ஓ''என்று அலறியபடி வீழ்ந்து இறந்தது. 'கெடுவான் கேடு நினைப்பான்'

த. பிரபாகரன்
ஆண்டு 9 ஏ,
யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி

### நாடுகளும் நாணயங்களும்

| நாடு | | நாணயம் |
|---|---|---|
| நோர்வே | - | குரோன் |
| ஈராக் | - | ஈராக்கி (தினர்) |
| ஜப்பான் | - | ஜென் |
| பின்லாந்து | - | மார்க் |
| அமெரிக்கா | - | டொலர் |
| பிறேசில் | - | க்ரூஸைரு |

### அறிவியல் விஞ்ஞானம்

பனி எப்படித் தோன்றுகிறது?

ஒருநாள் முழுவதும் வெய்யிலில் காய்ந்த பூமி இரவில் வெப்பத்தை விடுகிறது. புதர்கள், கிளைகள், பூக்கள் மிகச் சிறந்த குளிரச் செய்யும் பொருட்கள். அதனுல் வெப்பம் குளிர்ந்துவிடுகிறது. காற்றும் குளிர்மை அடைகின்றது. காற்றிலுள்ள நீராவித் துளிகள் தான் புற்களில் படர்கின்றன. இப்படித்தான் பனி தோன்றுகிறது.

புயல்கள் எப்படித் தோன்றுகின்றன?

ஓரிடத்தில் உள்ள காற்று சூரிய வெப்பத்தால் காய்ந்து இலேசாகின்றது. இலேசான காற்று மேலே சென்றுவிடு கையில் காலியான அந்த இடத்தை நிரப்புவதற்கு அழுத்தமுள்ள வரண்டகாற்று வேகமாக வீசுகின்றது.இதுவே புயலாக மாறுகின்றது.

### விடுகதை

1. குடியிருக்கக்கோட்டை கட்டும். கோட்டை உடைந்தால் வெளியே வரும் அது என்ன?
2. மனிதரின் வாயில் மலரும்பூ அது என்ன?
3. கழுத்தை வெட்டக் கண் தெரியும் அது என்ன?
4. நான் இருப்பது வானிலே, நீ இருப்பது நிலத்தின் அடியில் சட்டிக்குவா சந்திப்போம் அவை என்ன?
5. தினமும் வருவான் புதினம் தருவான்?

அ. சுலக்சன்
யா/ புனித ஜோண் பொஸ்கோ, வித்தியாலயம்.

விடை: 1. வண்ணத்துப்பூச்சி 2 சிரிப்பு. 3. நுங்கு. 4. புளிமீன். 5. செய்தித்தாள்.

### பாரதியார்

எட்டய புரத்தில் பிறந்தானும்
எட்டு வயதில் பட்டம் பெற்றுனும்
இளமையிலே கவிகள்பல புனேந்தானும்
மன்னரிடம் வெகுமதிகள் பலபெற்றுனும்.

சிறுவயதிலே தாயை இழந்தானும்
ஆனலும் தாய்நாட்டை இழக்கமறுத்தானும்
பார்போற்றும் கவிஞஞக உயர்ந்தானும்
பாரில்பல புரட்சிக்கவிகள் பாடினுனும்.

பாரதி என்று பெயர்கொண்டானும்
பாரில் அவன்பெயர் உயர்ந்ததாம்
பாட்டுக்கு ஒருபுலவன் பாரதியாம்
பகையே ஓடுமாம் அவன்பெயர்கேட்டாலேயாம்.

லோ. சிறீதரன்

## தெரிந்துகொள்ளுங்கள்

1. உலகில் உள்ள மிகப் பெரிய பூ எது?
2. சிறு நீரகக் கற்களை சத்திரசிகிச்சையின்றி அகற்றப் பயன்படுத்தப்படும் நவீன சிகிச்சையை எவ்வாறு அழைப்பர்?
3. மன்னர் காலித் சர்வதேச விமான நிலையம் எங்கு உள்ளது?
4. உலகில் முப்பத்தாறு மொழிகளில் ஒவ்வொரு திங்களும் வெளிவரும் அறிவியல் சஞ்சிகை எது?
5. உலகில் பெரிய நூலகம், புகையிரதநிலையம், வங்கி எது?
6. ''தியான்'' சதுக்கம் எங்குள்ளது? எதற்கு புகழ் பெற்றது?
7. உலகில் உள்ள பெரியநீர் வீழ்ச்சி எ?
8. உலகில் அரச அலுவல் நடக்கும் பெரிய கட்டிடம் எது?
9. உலகில் ஆகக்கூடிய மழை வீழ்ச்சி பெறும் இடம் எது?

**விடைகள்:**

1. ராம் சிலியா பூவின் விட்டம் 1மீ. 2. கழி யொழிச் சிகிச்சை முறை [லேசர் கதிர் முறை] 3. ரியாத் [ அரேபியா நாட்டில்] 4. யூ. என எஸ். கோ. கூரியர். 5. நூலகம்—அமெரிக்கா, புகையிரதம்,—கிராண்ட் சென்ரல், டோர்மில்ஸ் வங்கி—பாங் ஒப் அமெரிக்கா 6. 1989ஆம் ஆண்டு ''சீன அரசு'' மாணவர் கிளர்ச்சியை ஈவு ஈரக்கமின்றி ''பீக்கிங்கிலுள்ள'' இச்சதுக்கத்தில் நசுக்கியது. 7. வெனிசுலாவில் உள்ள ''ஏஞ்சல்'' என்னும் இடம். 8. பெண்டகன் ஐக்கிய அமெரிக்காவிலுள்ளது. 9. இந்தியாவிலுள்ள மேகலாய் மாநிலத்தில் உள்ள ''சிரபுஞ்சி'' என்ற இடம்.

க. ஜெயகயன்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
ஆண்டு 5.

சிங்களத்தில் தேர்ச்சி வேண்டுமா?
பேச எழுத வாசிக்க பரீட்சையில்
சித்தியடைய நாடவேண்டிய
ஒரே இடம்

"A" LEVEL CENTRE
1st Lane, Point Pedro Road,
Jaffna.

ஆரம்பம்: 1 - 7 _ 1995

பிரிவு: I சனி, ஞாயிறு காலை 8.00 9.00மணிவரை
பிரிவு: II சனி, ஞாயிறு பி.ப. 3.15 - 4.15 ,,

ஆசிரியர் : Miss A. Alista
(ஏ 5030)

நாட்டின் வரலாறு:

## சிங்கப்பூர்

உலகிலேயே மிக சுத்தமான நாடென வர்ணிக்கப்படும் சிங்கப்பூர் நாட்டின் தலைநகர் சிங்கப்பூர் ஆகும். இந்நாட்டின் மொத்த பரப்பளவு 616·3 சதுர கிலோ மீற்றர், இங்கு மொத்தமாக 28,00,000 மக்கள் வாழ்கின்றனர். இந்த நாட்டிலே பயன்படும் மொழிகளாவனவற்றிலே தமிழ்மொழியும் ஒன்று மேலும் மலாய், சீனம், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கே இந்து, கிறிஸ்தவம், முஸ்லிம், பௌத்தம் போன்ற சமயங்கள் பின்பற்றப்படுகின்றன.

சிங்கப்பூர்டொலர் என்பது சிங்கப்பூர் நாட்டின் நாணயமாகும்.

1819இல் அறிமுகமான சிங்கப்பூர் 1946இல் பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டது.

உலகிலே அதிக காலம் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பெருமையை தனதாக்கிக் கொண்டவர் சிங்கப்பூரின் முன்னுள் பிரதமர் லீக் குவான்யூ. சுற்றுலாதுறை இதன் முக்கிய வருமானம். மேலும் இந்நாடு ரப்பர், தகரப் பொருட்களை ஏற்றுமதியும் செய்கிறது. ஆசியாக் கண்டத்திலே மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இங்குதான் உள்ளது.

நாட்டின் அதிபர்: ஒங்டெங் செயாங்.

நாட்டின் பிரதமர்: கோக் கோக்டோங்.

இ. முரளீதரன்

## இவ்வாரம் எப்படி?

25 - 06 - 1995 முதல் 01 - 07 - 1995 வரை.

### மேடம்

தொழிலில் மந்தநிலை இருக்கும், பணவரவு அதிகமானலும் செலவினமுண்டு, உடல்நிலை பாதிப்படையும், குடும்ப ஒற்றுமை நிலைக்கும், நீண்ட காலப்பிரச்னை தீர்வுக்குவரும், மத்திம வாரம்.

### இடபம்

தொழில்துறை லாபகரமாக இருக்கும், உறவினர் வருகை குடும்பத்தில் கலகலப்பாக இருக்கும், சிறு சந்தேகம் மனஉளைச்சலைத் தரலாம், புதிய முதலீடுகள் பயன் தராது,புத்திரர் கவலையுண்டு, சுமாரான வாரம்.

### மிதுனம்

குடும்பத்தில் வேற்றுமை நிலவும், அதிகாரிகளின் தவருன போக்கு கவலைதரும், பணநிலை சுமாராக இருக்கும், வீணுன குறைகேட்க நேரிடும், தெய்வீக செலவினங்களுண்டு, மனஅமைதி குன்றிய வாரம்.

### கடகம்

தொழில் போட்டி நிலவும், எதிர்பாராத செலவினங்களால் கடன்பட நேரிடலாம், குடும்பத்தில் மன வெறுப்பு அதிகமாகும்,முயற்சிகள் தாமதமாகும், இனசன உறவில் விரிசல் ஏற்படும், குழப்பமான வாரம்.

### சிங்கம்

குடும்பத்தில் அன்புக்கு குறையிராது, தொழில் சுபிட்சமாக இருக்கும், நினைத்த காரியங்கள் கைகூடும், பணநிலை சிறப்பாக இருக்கும், பயணங்கள் சிறப்பாக அமையும், யோகமுள்ள வாரம்.

### கன்னி

தொழிலில் முன்னேற்றம் அதிகமிராது, குடும்ப நலனில் அமைதிக்குறைவுண்டு, நண்பர்கள் வெறுப்பு அதிகமாகும், பொதுப்பணிகளில் அலைச்சலுண்டு, பிதாவழி வரவால் கவலைதரும் சம்பவம் உண்டு. ஆதரவற்ற வாரம்.

### துலாம்

குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவு நிலவும், தொழிலில் பாதிப்புண்டு, பணநிலை மனத் திருப்திதராது, உறவினர் பகைஅதிகமாகும்,வேண்டாத பிரச்னையில் ஈடுபட்டு மன வேதனை ஏற்படும், அனுகூல மற்ற வாரம்.

### விருச்சிகம்

தொழில் சிறப்புண்டு, குடும்பத்தில் சுபகாரியம் நிகழும், தாயாரின் செயல் மனவேதனையை உருவாக்கும், புதிய உறவின்மூலம் காரியங்களைச் சாதிக்கவேண்டியேற்படும், பணநிலை மத்திமமாக இருக்கும், மகிழ்ச்சியான வாரம்.

### தனுசு

தொழில் நல்லபடியாக இருக்கும், எதிரிகள் நன்மைகள் செய்வர், குடும்ப நிலை கலகலப்பாக இருக்கும், வெளியூர் செய்திகள் மகிழ்ச்சியைத் தரும், உடல்நலம் நன்ருக இருக்கும், கலகலப்பான வாரம்.

### மகரம்

தொழிலில் • எவ்வித மாறுதலும் இருக்காது, சுமாரான லாபமுண்டு, மாமியார் விரோதம் நிலவும், கடன்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும், சகோதர வெறுப்பு உண்டு, காரிய தாமதங்கள் நிலவும், மத்திம வாரம்.

### கும்பம்

அதிகாரிகள் துன்பம் நிலவும், வேண்டாத பணிகளும் அலைச்சலுண்டு, முதலீடுகள் நஸ்டம் தரும், நண்பர்கள்மன வெறுப்படைவர், குடும்பத்தில் கவலையுண்டு, பணத்தட்டுப்பாடுண்டு, அமைதி குன்றிய வாரம்.

### மீனம்

தொழிலில் குறைகேட்பதுடன் வருவாய் குன்றியிருக்கும், குடும்பத்தில் இனம்புரியாத குற்ற உணர்வு மன வேதனைதரும், பிறர் வெறுப்புக்காளாக நேரிடும், காரியத் தடை இருக்கும், வேலைப்பழு அதிகரிக்கும், கவலைதரும் வாரம்.

### 21ம் நூற்றுண்டில்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படும். உலகம் வெளியிடும் கரியமலவாயுவை கட்டுப்படுத்தும் நிலைவரும். ஆயிரம் மீற்றர் உயர குடியிருப்புகளில் வாழமுற்படலாம்.

2018ம் ஆண்டில் மீன்வளத்தை அதிகரிப்பதற்கு ஏற்ற ஆராய்ச்சிகள் கண்டுபிடிக்கப்படும்,

ஜப்பானிய ஆய்வு

★ அழகுசாதன அலங்கார அன்பளிப்புப் பொருட்கள் ★ பிளாஸ்டிக் பொருட்கள்
★ எவர்சில்வர் பொருட்கள்
★ கைக்கடிகாரங்கள்
வாங்க சிறந்த ஸ்தாபனம்

ஞானம் ரேட் சென்ரர்

66, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.
(ஏ-5034)

# ஈழப்போரினுல் இந்தியாவுக்கு பெரும் பாதுகாப்பு சிக்கல்

## - தமிழக பிரதம செயலர்

(டில்லி)

இலங்கையின் இனப்போர் இந்தியா முழுவதிலும் பாரதூரமான பாதுகாப்புச் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளதாக தமிழக அரசின் பிரதம செயலர் ஹரிபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

'இந்து' பத்திரிகை இது குறித்த செய்தியை பிரசுரித்துள்ளது. அச்செய்தி மேலும் தெரிவிக்கையில்;

ஈழப்போரினுல் இந்தியா எதிர்நோக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தலகளைத் தடுப்பதற்கு தற்போதைய பாதுகாப்பு நடைமுறைகளில் விரைவான மாற்றம் கொண்டுவரப்படவேண்டியுள்ளது.

தமிழகக் கரையோரப் பகுதிகளில் வேகமாகச் செல்லக்கூடிய ரோந்துப்படகுகளை இந்தியக் கடற்படை பயன்படுத்த வேண்டும். தற்போது தமிழக கடலோரப் பகுதிகளில் உள்ள கடற்படைப் பிரிவுகள் நிரந்தரமாக்கப்படல்வேண்டும். கடல் பாதுகாப்பு முற்றாகத் திருத்தியமைக்கப்படல் வேண்டும் எனவும் இதுகுறித்து மத்தியபாதுகாப்பு அமைச்சரோடுதான் கலந்தாலோசிக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார். -கி-சி

# சென்னை பல்கலை. சான்றிதழ் கொழும்பில் விற்பனை

(சென்னை)

கொழும்பிலுளள் அச்சகமொன்று சென்னை பல்கலைக் கழகத்தின் பட்டதாரி சான்றிதழ்களை போலியாக அச்சிட்டு விற்பனை செய்து வந்துள்ளமை அம்பலத்திற்கு வந்துள்ளது.

இவ் அச்சகத்தினுல் சென்னை பல்கலைக் கழகச் சான்றிதழ்களுடன் மேலும் பல முக்கிய இந்திய கல்வி நிலையங்களின் போலி சான்றிதழ்களும் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் அறியப்பட்டுள்ளது.

மீரிகமவில் இயங்கி வந்த இவ் அச்சகத்தை முற்றுகையிட்டுள்ள பொலிஸார் இது தொடர்பாகச் சிலரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் வடபகுதியைச் சேர்ந்ததமிழ்ப்பெண்மணி ஒருவரும் அடங்குவார். -கி-சி

## தீவுகளின்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மையைப் பிரித்தானியாவிற்கு ஐ. தே. க. ஆட்சியாளர் கொடுத்திருந்த சூழலில் உயர்ந்த பட்சப் பேரத்தின் மூலம் இலங்கையை விரைவான கைத்தொழில் மயமாக்கற் பாதையில்இட்டுச் சென்றிருக்க முடியும்.

ஏகாதிபத்தியத்தின் திட்டங்கள் எவ்வாருயிருப்பினும் அதனை எதிர்கொள்வதற்குரிய பேரம் பேசும் சக்தி மிக்கத் தேசங்கள் தமது திட்டங்களை நிறைவேற்றுவதும் சாத்தியமே. அமெரிக்காவின் விருப்பங்களை மீறித் தென்கொரியா உற்பத்தியிலும், ஏற்றுமதி - இறக்குமதியிலும் அரச தலையீட்டையும், அரச கட்டுப்பாடுகளையும் அதிகரித்தமையை இதற்கு உதாரணமாகக் காணலாம். இந்த வகையில் முரண்பாடுகளை வைத்துக்கொண்டு தனது பேரம் பேசும் சக்தியைக் கையாண்ட முதலாவது நாடு தாய்வான் ஆகும். பின்பு தென்கொரியா அதை விடவும் தனது போத்தைச் சிறப்பாக அதிகரித்திருந்தது.

ஏகாதிபத்தியத்தின் தவிர்க்கமுடியாத தேவையை வைத்துக்கொண்டு தனது பேரத்தை மிக உச்ச அடைவிற் பயன்படுத்தி துரிதமான இராணுவ முன்னேற்றம் அடைந்த நாடாய் பாகிஸ்தான் காணப்படுகிறது. அதாவது ஜெனரல் ஷியா-உல் ஹக் பாகிஸ்தானின் ஜனுதிபதியாக இருந்த காலத்தில் ஆப்கானிஸ்தானுள் சோவியத் யூனியன் இராணுவத் தலையீட்டை மேற்கொண்டது. சோவியத்தின் இராணுவத்தை ஆப்கானை விட்டுத் துரத்த வேண்டுமென்ருல் அமெரிக்காவிற்குப் பாகிஸ்தானின் உதவி அத்தியாவசியமாகியது.

இந்நிலையில் பாகிஸ்தானின் உதவியை நாடிய திரு. ஜிம்மி காட்டர் நிர்வாகம் பாகிஸ்தானுக்குக் குறிப்பிடக்கூடிய அளவு நிதி உதவியை வழங்கியது. அந்த நிதியிற் திருப்தியடையாத ஹக் தனக்கு இந்தக் ''கச்சான் கோது'' வேண்டாம் எனக் கிண்டலாகக் கூறினுர். (காட்டர் ஒரு கச்சான் வியாபாரி என்பது குறிப்பிடத்தக்கது). எனினும் இக்கிண்டலைச் சகித்துக் கொண்டு அமெரிக்கா ஷியாவுல்ஹக் கேட்டவாறு உதவியை வழங்கவேண்டி ஏற்பட்டது. இவ்வாறு ஆப்கானில் இருந்த சோவியத் படைகளைப் பேரப் பொருளாக வைத்துக்கொண்டு ஷியாவுல்ஹக் ஆயுத பலத்தையும், வீதிப் போக்குவரத்து, மற்றும் நிர்மாணிப்புப் பணிகளையும் இலகுவாக மேற்கொண்டார். இக்காலப்பகுதியில்தான் பாகிஸ்தான் அணுசக்தி வல்லமை பொருந்திய நாடாகவும் வளர முடிந்தது.

இவ்வாறு பார்க்குமிடத்து ஐ. தே. க. விரும்பியிருந்தால் வலதுசாரிப்பாதையிலாயினும் பேரத்தைப் பயன்படுத்தி நாட்டைக் கைத்தொழில் பாதையில் இட்டுச் சென்றிருக்கமுடியும். இலங்கையிற் தோற்றம் பெற்ற முதலாவது கட்சி இடதுசாரிகளின் கட்சியே. [1935ஆம்ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சி] என்பதும் அதன்பின் தோன்றிய இரண்டாவது கட்சியும் இடதுசாரிக் கட்சியே [1943ஆம் ஆண்டு இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி] என்பதும், இவற்றின் பின்புதான் ஐ.தே. க. மற்றும் சு. க. என்பன தோன்றின. எனவே இலங்கையின் இடதுசாரிகள், கட்சி அமைப்பு முறையிலும் நீண்ட வரலாற்றையும் கொண்டவர்கள் மட்டுமன்றி மக்கள் மத்தியில் சேவையின் மூலம் தம்மை அறிமுகப்படுத்தியவர்களும் கூட. [அதாவது ''சூரியமல்'' இயக்கமும் மலேரியா எதிர்ப்பு நடவடிக்கையின் மூலமும் இவர்களின் சேவையை நாடு முதன் முறையாக அறியத் தொடங்கியது] இப்படிப்பட்ட நல்ல வரலாற்றையும் அறிமுகத்தையும் கொண்ட இடதுசாரிகளைக் கண்டு ஐ. தே. க. உண்மையிலேயே அச்சமடைந்தது.

## பல் லட்ச

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

இன மக்கள் அருகில் இருக்கும் சயரில் தஞ்சமடைந்தனர்.

இப்போதைய ஜனுதிபதி ஒரு மென்மையான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கின்ருர். இராணுவத்துடன் முட்டி மோதுவதற்கு விரும்பவில்லை. இனப்பிரச்னை தீர்வுக்கு பலரும் பல தீர்வுகள் முன் வைத்துள்ளார்கள்.

தீர்வாக இராணுவத்தில் உள்ள உயர் அதிகாரிகள் இராணுவத்திலுள்ள உயர் பதவிகள் யாவும் சரிசமமாகப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்கிருர்கள். ஆனல் புருண்டி இராணுவத்தில் உள்ள ஏனைய தரத்தவர்கள் 'ருட்சி' இனப் போராளிகளோடு தொடர்பு உடையவர்களாக இருக்கிருர்கள்.

புருண்டி இராணுவம் எப்பக்கமும் சாராது செயல்படுகின்றதோ அன்றேதான் அந்த நாட்டுக்கு விடிவு வரும் என்று பலர் கருதுகிருர்கள்.

## இந்தியா அஸ்ரப்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலிருக்கும் தமிழ் அகதிகளின் குடும்பத்தினரை டென்மார்க்கில் உள்ள அகதிகளுடன் இணைய அனுமதி மறுத்தது தொடர்பாக வழக்கு. முன்னுள் டென்மார்க்கின் நீதி அமைச்சருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்று அமைச்சரை குற்றவாளியாகக் கண்டு நான்கு மாத ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது. இதுவே மனித உரிமை பாதுகாப்பு. கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழ் ஆண்களையும் பெண்களையும் கைதுசெய்து, சித்திரவதை செய்து நீதிமன்றின்முன் முற்படுத்தாது வைத்திருப்பது எந்த மனித உரிமை பாதுகாப்புக்குள் அடங்குமோ தெரியாது. இந்த நடவடிக்கைகள் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்குத் தெரியாமலா இருக்கும்.

# இடைக்கால நிர்வாக அமைப்புக்கு சட்டமியற்றும் அதிகாரம் இல்லை

(கொழும்பு)

வடக்குகிழக்குக்கென ஜனுதிபதி சந்திரிகா அமைக்க உத்தேசித்துள்ள இடைக்கால நிர்வாக அமைப்பு முறைப்படியான சட்டமியற்றும் அதிகாரங்கள் எதனையும் கொண்டிருக்காது என நீதியமைச்சர் போராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த இடைக்கால நிர்வாக அமைப்பு குறித்த மாகாணத்தை நிர்வகிப்பதற்குரிய ஒரு அமைப்பாக மட்டுமே இருக்கமுடியுமெனவும் அமைச்சர் தெரிவித்திருக்கிருர்.

வடக்கு கிழக்கு மாகாண சபை 1990 முதல் செயற்படவில்லை. இதனுல் இவ்வாருன ஒரு இடைக்கால அமைப்பை உருவாக்குவதற்கு ஜனுதிபதிக்கு சட்டம் இடமளிக்கிறது.

இதேவேளை வடக்கு கிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாக அமைப்புக்கான அதிகார பொறுப்புக்கள் பற்றி அரச உயரதிகாரிகளையும், அரசியல் சட்ட வல்லுனர்களையும் கொண்ட குழுவொன்று விரைவில் தீர்மானிக்கவுள்ளதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

ஜனுதிபதி சந்திரிகா இக்குழுவில இடம்பெறவுள்ளோரை விரைவில் நியமிக்கவுள்ளார். இடைக்கால அமைப்புக்கான சட்டம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது. -கி-சி

## கோடீஸ்வரர்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்தது. இந்தக் கம்பனிகளின் அதிகாரங்கள் யாவும் ருெக்பெல்லர் தலைமை தாங்கும் 9 நம்பிக்கையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஒரு நம்பிக்கை நிதியத்துக்கு [ Trust] ஒரு கைத்தொழில் அதிகாரம் பெறுவதற்காக கூடுதலான லாபம் ஈட்டும் வாய்ப்புக்கள் சட்டப்படி வழங்கப்பட்டிருந்தன. இதன்காரணமாக ருெக்பெல்லருடைய நிதியமும் வேறு கைத்தொழில்களிலும் ஈடுபட்டது. எந்த ஒரு தொழிலுக்கும் இந்த 'நிதியம்' என்ற வார்த்தை ஏகபோக பயன்களும் லாபமும் பெற ஏதுவானது.

எண்ணெய் சுத்திகரிப்பையும் அதன் விநியோகத்தையும் ஐக்கிய அமெரிக்காவில் தன்கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஸ்ராண்டட் எண்ணெய்க் கம்பனி நிறுவனம் அதன் தொழிலை பரவலாக்கி அபிவிருத்திசெய்தது. சுதந்திரமான விநியோகத்தையும் தானே மேற்கொள்வதற்காக அது எண்ணெய் வயல்களின் ஆதிக்கத்தையும் கைப்பற்றியது. அத்தோடு இயற்கை வாயுவையும் அது சந்தைப்படுத்தியது. அதேநேரம் மறுபக்கத்தில் முழு அமெரிக்காவுக்கு வெளிநாடுகட்கு எரிபொருள் விநியோகத்தையும்அது மேற்கொண்டது.

ருெக்பல்லர் தவருமல் ஆலயம்செல்பவர்—எனினும் ஒருக்காலும் தனது தொழிலில் தான் தவறு விடுவதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

பாரிய கப்பல் உடையோர்க்கு புகையிரத கம்பனிகள் அதிகளவான கழிவுகள் வழங்குவதாக அவர் எடுத்துக் கூறுவார். ருெக்பெல்லர் தனது போட்டியாளர்களை விலைக்கு வாங்குவதற்காக காசுகளை அள்ளிவீசுவார். அல்லது ஸ்ராண்டட் கம்பெனிப் பங்குகளை வேண்டும்படி தூண்டுவார். அவருடைய புத்திமதிகளைக் கேட்டவர்களும் பெரும் பணக்காரர்களாயினர். வீண் விரயத்தை தடுத்தல் மற்றும் திறமையை வெல்லுதல் என்ற அடிப்படையில் ருெக்பெல்லர் தனது வைரிகளை வெல்ல முடிந்தது. ஸ்ராண்டட் எண்ணெய் நிறுவனம் தனது தயாரிப்பை பெருக்கிக் கொண்டது.

# உலகஅழகி ஐஸ்வரியாவுக்கு கொழும்பில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் உலக அழகுராணி ஐஸ்வரியா ராய்க்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்த செல்வி ஐஸ்வரியா ராய் இன்று இந்தியாவுக்கு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தற்பொழுது கொழும்பில் ஹோட்டல் 'லங்கா ஒபரேயில்' பலத்த பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டிருக்கிருர்.

குண்டுவெடிப்பு அச்சுறுத்தலினுல் பாதிக்கப்பட்டுள்ள உல்லாசப் பயணிகளின் வீழ்ச்சியை சீராக்கவும், பாதுகாப்புத் தேவைகளுக்கான நிதி சேகரிப்புக்கும் ஐஸ்வரியாவின் வருகையை இலங்கை அரசு பயன்படுத்துகிறது. ஐஸ்வரியா உல்லாசப் பயணத்துறை அமைச்சரையும் சந்தித்துப் பேசவுள்ளார். -கி-சி

# ரூ. 40 லட்சத்திற்கும் அதிகமான போதைவஸ்து மீட்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள விடுதி ஒன்றிலிருந்து பெருந்தொகையான போதை வஸ்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட இப் போதைப் பெருளின் பெறுமதி நாற்பது இலட்சம் ரூபாவுக்கும் அதிகமானது என கணக்கிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழர் ஒருவர் உட்பட இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். -கி-சி

# கொடி விற்பனை மூலம் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

(கொழும்பு)

'கொடி' விற்பனைமூலம் பாதுகாப்பு நிதி சேகரிப்பதற்கான திட்டமொன்றை அரசு ஆரம்பித்துள்ளது.

இதன்மூலம் பதின்நான்கு மில்லியன் ரூபாவைத் திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு படையினரை உற்சாகப்படுத்தும் வாசகங்கள் அடங்கிய 'பஜ்'களை விற்பனை செய்வதன்மூலம் இத்திட்டத்தின்கீழ் நிதி திரட்டப்படும்.

இதேபோன்று போரில் காயமடையும் படையினரின் வைத்தியத் தேவைகளுக்கு என மற்றுமொரு நிதி சேகரிப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (கி-சி)

# தனியார் தமிழ் ஒளிபரப்பை ஆரம்பிக்க ஆலோசனை

(கொழும்பு)

தமிழ் மொழி மூலமான நேயர்களுக்காக புறம்பான தமிழ் ஒளிபரப்பொன்றை ஆரம்பிப்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தனியார் தமிழ் ஒளிபரப்பொன்றை ஆரம்பிப்பது சாத்தியமானதா என ஆராயுமாறு 'ரூபவாஹினி' அதிகாரிகளை தகவல் ஒலிபரப்பு அமைச்சு கேட்டிருக்கிறது.

'ரூபவாஹினி' 1982ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல் தமிழுக்கெனதனியான ஒளிபரப்பொன்றின் அவசியம் பற்றி பல்வேறு அமைப்புகளும் வலியுறுத்திவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கி-சி

கொழும்பில் உள்ள

# பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் தலைமையகம்செல்லதமிழருக்குதடை!

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் அலுவலகத்துக்கு தமிழர்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது,

வடபகுதிக்கு பொருள்களை கப்பலிலும், தரைமார்க்கமாகவும் எடுத்து செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் அலுவலகத்துக்கு செல்லமுடியாது யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகளும், தனியார் வர்த்தகர்களும் கொழும்பில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாக தெரியவருகின்றது.

இதனைவிட யாழ், மாவட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உணவுப் பொருள்களை கொள்முதல் செய்து கப்பலில் தருவிக்க கொழும்பு சென்ற அதிகாரிகளும் கப்பல் வசதியின்றி பெரும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. -170-சி-ரி

மட்டக்களப்பு – கல்குடாவில்

# இராணுவம் . கடற்படை கூட்டு முகாம் அமைப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு கல்குடாப் பகுதியில், இராணுவமும் கடற்படையும் இணைந்து பாரிய முகாம் ஒன்றை புதிதாக அமைத்துள்ளார்கள்.

கல்குடா கடற் கரைக்கு அருகிலுள்ள வாடி வீட்டில் இந்த புதிய முகாம் கடந்த செவ்வாய்க்கிழமை அமைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் கடல்வழித் தாக்குதல்களை சமாளிக்கவே இப்புதிய முகாம் அமைக்கப் பட்டுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. -வி-ரி

# 'மாகோ' கப்பலில் தபால்கள் வராது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் தேங்கிக்கிடக்கும் யாழ். மாவட்டத்துக்கான தபால்கள் ''மாகோ'' கப்பலில் எடுத்துவரப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்திற்கான 650 தபால் பொதிகள் தற்போது கொழும்பில் தேங்கி கிடக்கின்றன. இவற்றில் 50 பொதிகளில் உள்ள தபால்களை மட்டுமே கடற்படையினர் உடைத்தும், கிழித்தும் சோதனை நடத்தியுள்ளனர்.

இதனால் தபால் பொதிகள் மீது முற்றுமுழுதான சோதனையை நடாத்திய பின்னரே கப்பலில் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும் என்று பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு கூறியுள்ளது.

பெரும்பாலும் இத்தபால் பொதிகள் 'கல்யாணி' என்ற கப்பலில் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கொழும்பு அஞ்சல் திணைக்கள அதிகாரி ஒருவர் வடமாகாண உதவி அஞ்சல் நாயகத்துக்கு அறிவித்துள்ளார். 170-ரி

# நாலாயிரம் சிங்களக் குடும்பங்கள். மகாவலிபகுதியிலிருந்துவெளியேற்றம்

(கொழும்பு)

மகாவலி குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் திட்டமிட்டவாறு அங்கிருந்து சிலரால் வெளியேற்றப்பட்டு வருவதாக பிரதி அமைச்சர் திரு. மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே சுமார் நலாயிரம் குடும்பங்கள் இவ்வாறு மகாவலி குடியேற்றப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன. இந்தச் செயலுக்கு மத்திய மாகண சபையும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.

# தொலைபேசி இணைப்பு வழங்கலில் ஊழல்

(கொழும்பு)

பொதுமக்களுக்கானதொலைபேசி வழங்கலில் பெரும் ஊழல் நிலவுவதாக 'ரூபவாஹினி' தெரிவித்துள்ளது;

தற்போது தொலைபேசியை பெறவிரும்பும் ஒருவருக்கு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பே தொலைபேசி இணைப்பு வழங்கப்படுகின்றது.

சிலர் ஆறு வருட காலங்கள்வரை காத்திருப்போர் பட்டியலுக்கு அமைய தொலைபேசி இணைப்பைப்பெற காத்திருக்கவேண்டியுள்ளது;

ஆனால் 'ரெலிகொம்' உயரதிகாரிகள் சிலர் இணைப்புக்காக விண்ணப்பித்தோரிடம் குறிப்பிடத்தக்க தொகையை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு சில மாதங்களிலேயே அவர்களுக்கு இணைப்பை வழங்குவதாகவும் இதனால் காத்திருப்போர் பட்டியலுக்கமைய வருடக்கணக்கில் பொறுத்திருப்பார் போதிக்கப்படுவதாகவும் 'ரூபவாஹினி' தெரிவிக்கிறது. (கி-ரி-சி)

## ரேட்டறிக்கழக ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ரேட்டறிக்கழகத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழா யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி ப. 3-30 மணிக்கு யாழ். ரேட்டறிக் கழகத் தலைவர் திரு.ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ரி)

## பிரபா விவகாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

வெளிநாடுகட்கு முக்கியமாக ஐரோப்பிய நாடுகட்கு நான் சென்று, விடுதலைப் புலிகளின் காரியாலயங்களை மூடும்படியும் அவர்கள் பணம் சேகரித்து ஆயுதம் பெறுவதையும் தடைசெய்யுமாறு அந்நாடுகளை கேட்டுக்கொண்டேன். ஆனால் அவர்கள் எங்கள் நாட்டில் அவ் அமைப்பு தடைசெய்யப்படவில்லை என்றும் அவர்களை தடைசெய்து கொண்டால அந்நாடுகளில் அவர்கள் மறைவிடங்களில் செயல்பட நேரிடும் இதனால் அவர்களின் நடவடிக்கையை கண்டறிவது கஷ்டம் என்று கூறினார்கள்.

தற்போது எமக்கும் ஐரோப்பிய நாடுகட்கு மிடையில் பல இணக்கப்பாடுகள், பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இதைக்கொண்டு புலிகளின் நடவடிக்கையை கட்டுப்படுத்த ஏதுவாக அமைந்துள்ளது.

காணமற்போனோர் பற்றி விசாரிக்க விசாரணை கமிஷன் அமைத்துள்ளோம். துன்புறுத்தல் புரிவோர்மீது நடவடிக்கை எடுக்க சட்டம் இயற்றியுள்ளோம். மனித உரிமைகள் கமிஷன் அமைத்துள்ளோம். விசாரணை, வழக்கு இன்றி தடுத்துவைக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்து ஜனநாயக நாடுகளில் ஆர்ப்பாட்டம் சுலபமாக நடத்தலாம். அந்தஅரசுகள் அதற்குஇடம் கொடுத்துள்ளது. 4 ஆயிரம் 5 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம் நடத்துவதையிட்டுநாம் அவ்வளவு அக்கறை கொள்ளவேண்டியதில்லை.

ஐ. நா சபையில் அங்கம் வகிக்கும் 181 நாடுகளில் 155 நாடுகள் இஸ்ரேலை அங்கீகரித்துள்ளன. இந்தியாவும்மற்றும் எகிப்து, ஜோர்டான் ஆகிய முஸ்லிம் நாடுகளும் அங்கீகரித்துள்ளன. நாங்கள் இதுபற்றி ஆராய்கிறோமே ஒழிய ஒரு முடிவுக்கும் இன்னும் வரவில்லை என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்தார். (ஜே-ரி)

யாழ். ஆஸ்பத்திரியில்

# தாதிகள் விடுதியில் ரி.வி. பெட்டி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திருடர் கோஷ்டி ஒன்று வைத்தியசாலை தாதிகள் தங்கும் விடுதிக்குள் புகுந்து அங்கிருந்த கலர் தொலைக்காட்சியை திருடிச் சென்றுள்ளனர்.

இதைவிட கடந்த 17ஆம் திகதி இரவும் திருடர் கோஷ்டியினர் வைத்தியசாலைக்குள் புகுந்து திருட எடுதத முயற்சி கைகூடவில்லை.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற திருட்டு முயற்சியை தொடர்ந்து இரவு நேரங்களில் வைத்தியசாலையின்பாதுகாப்பை வைத்தியசாலை நிர்வாகம் பலப்படுத்தியுள்ளது. -170-90-சி-ரி

## 37 தனியார்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைத்து கல்விபெற வசதி செய்வது குறித்து பல ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை துணைவேந்தர் பேராசிரியர் க.குணரத்தினம் நேற்று பல்கலைக் கழகப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்;

இவ் அறிக்கையை பல்கலைக்கழகப்பேரவையும் ஏற்றுக்கொண்டது.

இதனை அடுத்து மேற்படி 37 மாணவரையும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைத்து கல்வி வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடைமுறைகளை துணைவேந்தர் மேற்கொள்வார் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. (170-சி-ரி)

கொழும்புத்துறைமுகத்தில்

# தூத்துக்குடி கப்பல்களுக்கு தடை; இரண்டாயிரம் பேர் வேலைஇழப்பர்!

(சென்னை)

தூத்துக்குடிக்கு வரும் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைவதற்கு இலங்கை அரசு தடை விதித்ததினால் தமிழ்நாட்டுக்கு பெரும் அன்னியச் செலாவணி நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்ட உணவு வகைகள் மூலம் தாம் நல்ல லாபத்தை பெற்றுவந்ததாகவும். தற்போது தமது கப்பல்களை கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைவதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளமையினால் தமக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கப்பல் கொம்பனி உரிமையாளர்ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

சென்ற நிதியாண்டில் இலங்கைக்கு கப்பல் மூலம் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தமையினால் சுமார் 37 லட்சம் அமெரிக்க டொலர் அன்னிய செலாவணி கிடைத்தது. இலங்கை அரசின் இந்த திடீர் தடை உத்தரவினால் இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலையை இழக்கும் நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். வி-ரி

## வண.பிதா மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

மட்டு. மாவட்டத்திலுள்ள வாகரையில் வண. பிதா ஜேசுதாசன் கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாத நபர் ஒருவரினால் சுடப்பட்டு பொலநறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் இதுபற்றி புலன்விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## புறக்கோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்குண்டுவெடிப்புகள் நிகழ்ந்து வருவதும் தெரிந்ததே. (கி-சி-ரி)

# வடமராட்சி கடலில் மீனவர் மீது கடற்படை தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீது கடற்படையினர் இரு டோறுப் படகில் வந்து தாக்குதல் நடாத்தியதில் ஒரு மீனவர் படுகாயமடைந்தார். அவரது படகும் படகின் இயந்திரமும் சேதமடைந்தன:

நேற்று அதிகாலை காங்கேசன்துறைப் பக்கமிருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி இரு டோறுப் படகுகளில் வந்த கடற்படையினர் ஆதிகோவிலடி, வல்வெட்டிந்துறை பொலிகண்டி, திக்கம், சக்கோட்டை போன்ற பகுதிகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

படையினரின் கலிபர் தாக்குதலில் சக்கோட்டைக் கடல் மீன் பிடித்துக்கொண்டிருந்த சுப்பர் மடத்தடியைச் சேர்ந்த அலெக்ஸ் றொபேட் வின்சன் (வயது 30) என்பவர் படுகாயமடைந்தார். அவருடன் மீன்பிடிக்கச்சென்ற மற்றொரு மீனவரான செல்லத்துரை அபிமன்யு (வயது 31) என்பவர் தனது சாதுரியத்தால், படகும் படகின் இழுவை யந்திரமும் படுமோசமாகசேதமடைந்த போதும் ஒருவாறு கரைசேர்த்து காயமடைந்தவரை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தார்.

ஏனைய இடங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை கடலில் கைவிட்ட நிலையில் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர். 51-60ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் கம்பெனியாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.